ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

லர் 44] இரக்தாக்ஷி ஆண்டு கார்த்திகைத்திங்கள் 10-12-84 [இதழ்

திருவாதிரைத் திருவிழா

28—12—84 முதல் 6—1—85 வரை



திருவாதிரைத் திருநாளில் தில்லைப் பெருங்கூத்தர்
ஒருவா களிநடனம் போற்றிஉயர்ந் தின்புறுவோம்.

தருமையாதினக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்
அருள்வாக்கு

சிற்பர நாதன் கமலையுள்
ஞானப்ர காசசிவன்
அற்புத முத்திக் கொடிகட்டி
னன்; அல மந்துழன்று
பிற்படு வீர்கெடு வீர்பிறர்
கூறும் பிரட்டைவிட்டு
முற்பட வோடி யவன்பாத
பங்கய முன்னில்லுமே.

— ஞானப்பிரகாசமாலை 3

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீன திங்கள் இதழ்

மலர் 44 | 10–12–84 | இதழ் 1

உட்பொருள்

எண்		பக்கம்
1	பத்திசெய்வோம்! பாரினில் உயர்வோம்!	1
2	தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	6
3	தமிழர் வாழ்வின் இதயமாய் வாழும் ஏடு!	14
4	திருநாவுக்கரசர் ...	15
5	"திருஞானசம்பந்தரும் குருநானக்கும்" ...	17
6	பீடுநடை ஏடு வாழ்க!	25
7	மதுரைக்கோயிலின் மாட்சி! ...	26
8	காலங்கள் மாறட்டும்! கண்கள் திறக்கட்டும்!!	28
9	சிவப்பிரகாச சுவாமிகள்	31
10	மூவர் தமிழில் முருகன்	35
11	கடிதம் ...	42
12	கதிரவன் குடும்பம் ...	43
13	திருவருட்பாத் திரட்டு	47
14	அபிராமி அந்தாதி ...	50
15	செய்திகள் ...	55
16	இயக்குநர் நியமனம் -	63
17	இரா. செல்வக்கணபதிக்கு 'டாக்டர்' பட்டம் ...	64
18	எதிர்காலம் ...	65

உ

குருபாதம்

தருமையாதீனம்

"ஞானசம்பந்தம்" திங்கள் இதழ்

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

தருமையாதீனத்திலிருந்து திங்கள்தோறும், மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமணமும்பரப்பி, சிவஞானத்தேன் நிறைத்து, கற்போர் கருத்தைக் கவர்ந்துவருவது ஞான சம்பந்தம். சந்தாதாரர்கள் தொடர்ந்து ஆண்டுக்கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர்களாகச் சேரவிரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக்கட்டணம் அனுப்பியும் ஞானசம்பந்தம் இதழைப் பெற்றுக் கற்றுப் பயனுறுவார்களாக.

வேலை மிகுதியினுலோ அல்லது மறதியினுலோ ஆண்டுச்சந்தா செலுத்துவதில் தடை ஏற்படலாம், தடையில்லாமல் ஞானசம்பந்தம் பெற வாய்ப்பு அளிக்கும் முறையில் ஆயுள் சந்தா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 19—2—1972 முதல் இன்றுவரை 1065 அன்பர்கள் ஆயுள் சந்தா செலுத்தியுள்ளனர். ஆயுள் சந்தா செலுத்தினுல் அவர்களது வாரிசுகளும் ஞானசம்பந்தம்பெற வசதிசெய்து தரப்படும். மேலும் தமது ஆயுள் சந்தாவை மற்றவர்களுக்கோ கல்வி, அறநிறுவனங்களுக்கோ மாற்றிக் கொடுக்க விரும்பினுல் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்தி ஆயுள் சந்தாதாரர்களாகச்சேர்ந்து ஞானசம்பந்தம் பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். இன்றே உங்களை ஆயுள் உறுப்பினராக்கிக்கொள்ளுங்கள்.

ஆண்டுச்சந்தா செலுத்துவோர் 1985 ஜனவரி 31 தேதிக்குள் சந்தாத் தொகை கிடைக்கச்செய்யவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா (உள்நாடு)	ரூ.	12—00
ஆண்டுச் சந்தா (சிலோன்) ...	ரூ.	25—00
ஆண்டுச் சந்தா (வெளிநாடு) ...	ரூ.	35—00
ஆயுள் சந்தா (உள்நாடு) ...	ரூ.	125—00
ஆயுள் சந்தா (வெளிநாடு)	ரூ.	350—00

விளம்பரம்

பின் அட்டை வெளிப்பக்கம் இரண்டுகலர்	ரூ.	300—00
பின் அட்டை உட்பக்கம் ஒருகலர்	ரூ.	200—00
இதழின் உட்பக்கம் ஒருகலர்	ரூ.	100—00
இதழின் உட்பக்கம் அரைப்பக்கம் ஒருகலர்	ரூ.	50—00

செயலாளர், ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மயிலாடுதுறை 609 001.
தஞ்சை மாவட்டம்.

குறிப்பு :— ஆயுள்சந்தா தொகை அனுப்புவோர் "ஞானசம்பந்தம் திங்கள் இதழ்" என்கிற பெயருக்கு டிராப்ட் எடுத்து அனுப்பக் கேட்டுக்கொள்கிறோம்.

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 44 | இரக்தாக்ஷி–கார்த்திகை–10–12–84 | இதழ் 1

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

பத்திசெய்வோம் பாரினில் உயர்வோம்

மார்கழி மாதத்தின் மாண்பு :

மார்கழி மாதம் பிறக்கிறது. இம் மாதம் பீடுடைய மாதம் எனப் பெருமிதத்தோடு பேசப்படுகிறது. "மாதங்களில் நான் மார்கழியாகத் திகழ்கிறேன்" எனப் பகவத்கீதையிலே பார்த்தனுக்கு கண்ணன் கூறுகிறான். இம்மாதத்திலே அதிகாலையில் எழுந்து நீராடி ஆண்டவனை வழிபட்டு வணங்குவது மிகச்சிறப்பாகும் சைவரும் வைணவரும் இம்மாதத்தைச் சீரிய முறையில் கொண்டாடுகிறார்கள். சைவர்கள் திருவெம்பாவையையும், வைணவர்கள் திருப்பாவையையும் இம்மாதத்தில் சிறப்பாகஓதுகின்றனர். திருவாதிரை நன்னாளும் வைகுண்ட ஏகாதசியும் மார்கழி மாதத்தில் வருகின்றன. பத்தி செய்து பரமனை வழிபட மார்கழி மாதம் மிகவும் ஏற்றது.

பத்தியின் பெருமை :

பத்தியால் பலநல்ல பண்புகள் வளர்கின்றன. இக்கலியுகத்தில் பத்தி மார்க்கமே எளிதானது – சுலபமானது. பத்தியே

பாமரர்க்கும் பண்டிதர்க்கும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் வலியார்க்கும் மெலியார்க்கும், கற்றார்க்கும் கல்லார்க்கும் ஏற்ற நெறியாகும் – இனியவழியாகும்.

“ பத்தி வலையில் படுவோன் காண்க! ”

“ பத்தி செய் அடியரைப் பரம்பரத்து உய்ப்பவன் ” என்று திருவாசகம் பேசும். மணிவாசகர் இறைவனைப் “ பத்திக் கடலில் பதித்த பரஞ்சோதி ” (திருவா. திருத்தெள். 12) என்பார் என்றால் பத்தியின் பெருமை பகர முடியாத சீர்த்தி உடையது – கீர்த்தி உடையது. பத்தியின் சிறப்பைப்பாடவந்த பாரதியார்பகர்வார்:

“ பத்தி யினாலே — இந்தப்
பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடி!
சித்தம் தெளியும் — இங்குச்
செய்கை அனைத்திலும் செம்மை பிறந்திடும்
வித்தைகள் சேரும் — நல்ல
வீரர் உறவுகிடைக்கும் மனத்திடைத்
தத்துவ முண்டாம் — நெஞ்சில்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும்.

தேசிய மகாகவி தெய்வத்தைவணங்கவே–இறைவனை வழிபட்டு இன்புற்றிருக்கவே இப்பிறவி தரப்பட்டது என்று இயம்புவதைக் காணலாம்.

“ எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்ததுவாய்
விண்ணில் சுடர்கின்ற மீனையெல்லாம் — பண்ணியதோர்
சக்தியே நம்மைச் சமைத்ததுகாண் நூறுண்டு
பக்தியுடன் வாழும் படிக்கு. ”

பத்தி மார்க்கத்தால் முத்தி :

அருணகிரியார் பாடல்கள் அமுதப் பாடல்கள். அரிமா நோக்குடைய அற்புதப்பாடல்கள். முத்திக்குமார்க்கம் பத்தியே என்பதைப் பாமரருக்கும் விளங்கும் வண்ணம் பலபட அருணகிரியார் ஓதுவார்:

“ பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறுஎனைப் பெரு வாழ்வில்
முத்தியே சேர்வதற்கு அருள் வாயே! ”

என்று அறுமுகச் சிவத்தை அருணகிரியார் அருமையாக வேண்டுவதைக் காணலாம். அவனது திருப்புகழைப் பாடித்

துதித்தால் பலகாலும் பற்றி வழிபட்டால் முத்தனுகலாம் முத்தியும் பெறலாம் என அண்ணல் கூறுவது அறிந்தறிந்து இன்புறத்தக்கதாகும். இப்பாட்டுக்கு உரையுரைத்து ஒப்புவார் போல, இதே கருத்தை இன்னெரு முறையில் – இன்னெரு வடிவில் பாரதியார் இயம்புவதைக் காணலாம்:

"எத்தனேகோடி இன்பம் வைத்தாய் – எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!
....
முத்திஎன் றெரு நிலேசமைத்தாய் – அங்கு
முழுதினேயும் உணரும் உணர்வு அமைத்தாய்
பத்திஎன் றெருநிலே வகுத்தாய் – எங்கள்
பரமா! பரமா! பரமா!"

முத்திநிலேயைப் பற்றிப்பிடிக்க, பத்திநிலே ஏற்றது என்கிருர். அதைக்கண்டறிந்த ஆனந்தக்களிப்பிலே "பரமா! பரமா! பரமா!" என்று பூரித்து அகம் நெகிழ்ந்து புளகாங்கிதம் அடைவது நமக்குப் புரிகிறது.

நாலான மார்க்கத்தில் மேலான மார்க்கம் :

பொதுவாக, கருமம், யோகம், ஞானம், பக்தி என்ற நாலு மார்க்கங்களேக் கீதைகூறுகிறது. நாலான மார்க்கங்களில் மேலானது பத்தியேஆகும். நாலுமார்க்கத்தில் யோகம், ஞானம் கருமமார்க்கங்கள் எல்லாரும் பின்பற்ற இயலாதனவாகும். ஆனல் பத்திமார்க்கம் பாமரர்க்கும் ஏற்றது – எவரும் பத்தி மார்க்கத்தைப் பின்பற்றலாம். நாயன்மார்கள் நற்சரிதம் நமக்குப் பத்தியின் சிறப்பைப்பலவாறு விரித்து ஓதி விளக்குவதைக் காண்கிரேம். தெய்வ மெய்ஞ்ஞானத்தைப் பெற்ற அடியவரும் கூடத் தெய்வத் திருக்கோயில்களே நாடிப்போவதைப் பார்க்கிரேம். நம் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பத்தியின் சிறப்பைப் பாமர மக்களுக்கும் எடுத்தோதி ஆற்றுப்படுத்துவது – ஆலயங்கட்குப் போகுமாறு அறிவுறுத்துவது சீரியதோர் செயலாகும். அவர்களே தவருது ஆலயத்திற்குக் காலே மாலே சென்று இறைவனே வழிபட்டுத்துதிப்பது–தாங்களே ஓர் எடுத்துக்காட்டாக இருந்து காட்டுவது அரியதோர் செயலாகும்.

அருணகிரிநாதர் யோக மார்க்கத்தையும் பத்திமார்க்கத்தையும் சீர்தூக்கிக் காட்டிச் சிறந்தது பத்தியே எனப் பகர்வதைக் காணலாம்.

"காட்டில் குறத்திப் பிரான்பதத் தேகருத் தைப் புகட்டின்
வீட்டில் புகுதல் மிகஎளி தே!"

என்று பத்தியின் எளிமையைப் படம்பிடித்துக் காட்டுகிறார். அதே அலங்காரப்பாட்டில் அருணகிரியார் பேசுவார்:

"...................... .... விழிநாசி வைத்து
முட்டிக் கபால மூலாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஒட்டிப் பிடித்தெங்கும் ஓடாமல் சாதிக்கும் யோகிகளே!"

எனப் பத்திமார்க்கத்தின் எளிமையையும் யோகமார்க்கத்தின் அருமையையும் அருணகிரியார் நமக்கு அறிவுறுத்துவது அறிந்து அறிந்து இன்புறத்தக்கதாகும்.

இன்னும் பத்தி மார்க்கத்தால் தான் புத்தி தெளியும் எனவும் அருணகிரியாரே புகட்டித்தெளிவிக்கிறார். "பத்தித்துறையிழிந்து ஆனந்த வாரி படிவதனால், புத்தித் தரங்கம் தெளிவதுஎன்றோ?" எனத் தெரிவிப்பதைக் காணுங்கள். ஆகையால் மேலானமார்க்கம் – நாலான மார்க்கத்தில் நல்ல மார்க்கம் பத்திமார்க்கமே ஆகும் என்பது வெளிப்படை.

கீதைகாட்டும் பாதை :

கண்ணன் காட்டும் பாதையும் கடவுளைப்பற்றிப் பத்தி செய்வதே ஆகும் - பகவத்கீதையில் பன்னிரெண்டாம் அத்தியாயம் பத்தியைப் பற்றியது ஆகும். பத்திமார்க்கமே மேம்பட்டது என்பதைப் பகவத்கீதை 20 சுலோகங்களில் இனிது விளக்குகிறது. பத்தனே எனக்கு இனியவன் எனக் கண்ணன் பகவத்கீதையில் பகர்வதைக் காணலாம்.

"எதனையும் எதிர்பார்த்தலின்றித் தூயோனாய், திறமுடையோனாய்ப் பற்றுதல் அற்றவனாய், கவலைநீங்கியவனாய், எல்லா ஆசாபாசங்களையும் துறந்து என்னிடம் பக்திசெய்வோனே எனக்கு இனியவனாவான்" (16)

"புகழையும் இகழையும் நிகராகக்கொண்ட மௌனி, யாதுவரினும் அதில்மகிழ்ச்சியுறுவான், குறியற்றான், ஸ்திரபுத்தியுடையான் – இத்தகைய பக்தன் எனக்கு இனியவனாவான்" (19)

"பக்திமான் ய: ஸமேப்ரிய:" – பக்தி செய்யும் அவனே எனக்கும் பிரியமானவன் எனப்பக்தியின் சிறப்பைப் பகவத்கீதை எடுத்தியம்புவதைப் பார்க்கலாம்.

நால்வரும் பத்தியும் :

நால்வரில் முதல்வரான நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர் பத்தியால் நல்வினைபெறலாம் எனப்பேசுகிருர்:

" நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய்! யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும், சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்ப, புகழ்நாளும் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே "

இடையருப் பேரன்பு பூண்டவரும், மழைவாரும் இணை விழிகள் கொண்டவருமான அப்பர் பெருமான் தாம்பாடிய முதற் பதிகத்திலேயே பத்தியின் சிறப்பைப்பற்றிப்பேசுவதைப் பார்க்கலாம்.

" சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலம்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னுமம் என்நாவில் மறந்தறியேன் "

மணிவாசகப் பெருந்தகையும் பத்திநெறியைப் பரமன் தமக்கு அறிவித்தான் எனவும் அதனல் பழவினைகள் பறிக்கப் பட்டன எனவும் பகர்கிருர்.

" முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே "

சுந்தரமூர்த்திநாயனர் பத்தியின் சிறப்பைப்பல இடங்களில் எடுத்தோதுகிருர். திருத்தொண்டத் தொகையிலே தாம் பத்தர் களாய் இருந்து பாடுவார்க்கு அடிமை எனக் கூறுவார்.

" பத்தராய்ப் பணிவார்கள் எல்லோர்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன் "

எனத் தம் அடிமைத் திறத்தை அழகுப்படக் கூறுகின்ருர். — நால்வர் பெருமக்கள் சென்றபாதை – நின்றபாதை பத்திப் பாதையே ஆகும். பத்திப்பாதையிலே செல்வோர் வெற்றிப் பாதையில் செல்வோர் ஆவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பத்திப்பாதையில் நடந்து பலமும் பயனும் பெறுவோமாக!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் சார்பில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் மற்றும் இந்திய மொழிகளின் செயல் முறைத் திட்டப்பண்ணையில் கலந்துகொண்ட பேராசிரியர்கள் குருமணியைத் தரிசித்தபோது

வழங்கியருளிய

ஆசியுரை

18—11—1984

" என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் — புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான் "

கன்னித் தமிழ் :

கல்லூரிகளில் தமிழ்மொழியில் இளங்கலை பயிலும் மாணாக்கர்கள் மத்தியில் ஆய்வுநோக்கு வளர வேண்டும் என்ற அடிப்படையில் அதற்குரிய வழிவகைகளைத் திரட்ட ஒரு செயல் முறைத் திட்டப்பண்ணையைப் பேராசிரியர்களாகிய நீங்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிறீர்கள்.

தமிழ்மொழியைச் 'செந்தமிழ்' என்றும் இளமைத் தன்மை கொண்ட 'கன்னித் தமிழ்' என்றும் கூறுவதுண்டு. பண்டு இருந்தது போலவே இன்றும் இது இருக்கிறது. ஆனால் இம் மொழியில் ஆங்கிலத்தில் இருப்பதுபோலப் பல கலைச்சொற்கள் இல்லை. ஆங்கிலமொழி சற்றேறக்குறைய 500/600 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது. பிற்காலத்து மொழியாகிய அது

இன்று உலகளாவிய மொழியாக வளர்ந்துள்ளது. காரணம் எல்லா மொழிச் சொற்களையும் அப்படியே எடுத்துக் கொள்கிறது. பல்வேறு மொழிச் சொற்களும் கலந்த ஒரு கலப்பட மொழியாகத்தான் அது வளர்ந்துள்ளது. தமிழ்மொழி பெரும்பாலும் பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ளாமலும் அங்ஙனம் ஏற்றாலும் தன்நிலைக்கேற்ப மாற்றி ஏற்றும், தூய்மை கெடாமல் விளங்குகிறது. ஆனால் தூய்மையாக இருப்பதிலே வளர்ச்சியைக் காண முடியவில்லை.

நல்ல முடிவை எடுப்போம் :

ஆங்கிலேயர்கள் எந்தச் சொல்லையும் அப்படியே எடுத்து வைத்துக் கொள்கிறார்கள். நாம் அப்படி இல்லை. சைக்கிளை 'மிதிவண்டி' என்று சொல்லலாமா? 'உந்துவண்டி' என்று சொல்லலாமா? என ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றோம். அவ்வப்பொழுது வரும் சொற்களை அப்படியப்படியே ஏற்றுக் கொள்வதனால் அம்மொழியில் 200 ஆண்டுகட்கு முன்பு இருந்ததற்கும் இப்பொழுது இருப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. ஆங்கிலமொழியில் எம். ஏ., பட்டம் பெற்றவர்கள் கூட 200 ஆண்டுகட்கு முன்பு தோன்றிய ஆங்கில இலக்கியங்களைப் படிக்க இயலாது. ஆனால் தமிழ்மொழியில் அப்படி இல்லை. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு தோன்றிய தொல்காப்பியத்தை இன்று இம்மொழியில் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் படிக்கவும் பயிற்றுவிக்கவும் இயல்கிறது. தமிழ் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த நிலையிலேயே இன்றும் நிலைமாறாமல் இருந்துவருகிறது. அதனால் இதனைக் 'கன்னித்தமிழ்' என்கின்றோம். எனினும் வளர்ச்சி நோக்கிச் சில சிந்தனைகளை மேற்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் இந்த உலகத்தில் புதிய கலைச் சொற்களுக்குச் சில புதிய சொற்களை ஆக்கித் தருகின்றோம்–அவற்றைவைத்துக் கொள்ளுங்கள் என்றால் அதுவரை காலம் காத்திராது. இருக்கிற வேற்றுமொழிச் சொற்களை அப்படியே ஆங்கிலத்தைப்போல ஏற்றுக் கொள்ளலாம் எனில் இவ்வளவு நாட்களாகக் காத்து வந்த சிறப்பைக் கைவிட்டமாதிரி ஆய்விடுகிறது. ஒருமுடிவிற்கு வர முடியாமல் உள்ளது. விரைந்து நல்ல முடிவை அனைவரும் கூடி எடுப்பது நல்லது.

அண்டவெளி ஆய்வில் பண்டைத் தமிழர் :

தமிழர்தம் வாழ்வியல் அகவாழ்வு என்றும் புறவாழ்வு என்றும் இறைவாழ்வு என்றும் அமைந்திருந்தது. அவர்களிடத்திலே விஞ்ஞானக் கருத்துக்களும் ஆங்காங்கே இருந்திருக்கின்றன. அவற்றை மேலும் ஆய்வுசெய்தல் அவசியம். 'ஞாலம்'

என்னும் ஒருசொல் உலகத்தைக் குறிக்கிறது. இன்றைய அண்ட வெளி ஆராய்ச்சியாளர்கள் வான்வெளியில் எல்லாக் கிரகங்களும் ஆங்கங்கே தனித்தனியே தொங்கிக்கொண்டிருக்கின்றன என்று கூறுகின்றனர். 'ஞாலுதல்' என்றால் தொங்குதல் என்று பொருள். தொங்குதல் என்னும் பொருளுடைய சொல்லை உலகத்தைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ள முன்னோர்களின் அறிவைக்கண்டு அவர்களின் விஞ்ஞானப் புலமையை உணர முடிகின்றது. எல்லா உலகங்களையும் ஞாலம் எனும் சொல் குறிக்கும். ஆகாய வெளியிலே எல்லா உலகங்களும் அதாவது எல்லா கிரகங்களும் தொங்கிக்கொண்டே இயங்குகின்றன. சூரியன், சந்திரன், பூமி எனப் பலவாக அவை அமைகின்றன. ஒவ்வொன்றினுடைய ஈர்ப்புச் சக்திக்கேற்ப அவை அவை இயங்கிக்கொண்டிருக்கின்றன. இதனை மாணிக்கவாசகர்,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"

என்று அருளுகின்றார். "சாணினும் உளன்; ஓர் தன்மை அணுவினைச் சதகூறு இட்ட கோணினும் உளன்" என்று கம்பர் கூறுகின்றார். எனவே முன்னோர்கள் அணு மற்றும் அண்டவெளி பற்றி நன்கு அறிந்திருந்தனர் என்பது விளங்கும்.

ஆண்டவனின் கட்டளை :

ஆனால், இத்தகைய வான்வெளி ஆய்வு மேற்கொண்ட அறிஞர்கள் இந்தத்தமிழ்மண்ணில் வாழ்ந்தார்கள் என்பதற்குச் சுவடுகூடத் தெரியாத அளவு இன்று எல்லாம் மங்கிப் போயினவே! இது ஏன்? என்று சிந்தித்துப் பார்த்தல்அவசியம்.

இறைவன் இந்தத்தமிழகத்திற்குமட்டும் உரியவன்என்றோ, இங்கே மட்டும் அவன் ஆட்சி நடைபெறுகிறது என்றோ கருதுவது அறியாமை. அவன் அருள் எங்கும் பரந்துள்ளது. எனவே இங்கே முன்பு இருந்த ஆராய்ச்சியாளர்களை – அறிஞர்களை மேலைநாடுகளுக்கு அனுப்பிவிட்டு அங்கே இருந்தவர்களை இங்கு அனுப்பியிருப்பாரோ என்று எண்ண வேண்டியுள்ளது. உயிர் இங்குதான் பிறக்க வேண்டும் என்னும் நியதியில்லை. ஒருவனுக்கு மகனாகப் பிறப்பவன் அடுத்த பிறவியில் பகைவனாகவும் பிறக்கலாம். பகைவனாக இருப்பவன் மறுபிறவியில் மகனாகவும் பிறக்கலாம். எனவே உயிர் எடுக்கும் பிறப்பில்

கால, தேச, உறவு வேறுபாடுகள் நிகழ்வது இயற்கை. அறிவாளிகளின் பிள்ளைகள் அறிவுத்தெளிவின்றிப் பிறப்பது போலவும் அறிவுத் தெளிவில்லாதவன் பிள்ளைகள் அறிவாளிகளாகப் பிறப்பது போலவும் இன்று நம்முடைய நாட்டிலும் வெளிநாட்டிலும் நிகழ்கின்றனவோ என்று எண்ணவேண்டியுள்ளது. இந்திய எல்லைப் பரப்பை ஆளும் தலைவருக்கு ஒரு மாநிலத்திலுள்ள ஓர் அதிகாரியை இன்னொரு மாநிலத்திற்கு மாற்றும் அதிகாரம் உண்டு என்பது போல உலகம் முழுமையும் அருளாட்சிசெய்யும் ஆண்டவனும் இடம்மாற்றி உயிர்களைப்பிறக்க வைக்க இயலும். இவை எல்லாம் ஆண்டவன் கட்டளையாக இருக்கலாம்.

உலகப்பார்வை அவசியம் :

இறைவனின் அருளாட்சி உலகம் முழுமையும் பரந்து விரிந்துள்ளது என்பதை உளங்கொண்ட முன்னோர்கள் தமது நூலைத் தொடங்கும் போது 'உலகம்' என்னும் சொல்லையே முதன்மையாகக் கொண்டு பாடியுள்ளனர். திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு" என்றும், சேக்கிழார் 'உலகெலாம்' என்றும், 'கம்பர் உலகம் யாவையும்' என்றும் தொடங்கியுள்ளமையை இங்கு ஒப்பு நோக்கிக் காணலாம். "ஜெய் ஹிந்த்" என்று காந்தியடிகள் கூறினர். அதையும் கடந்து வினோபா அடிகள் "ஜெய் ஜகத்" என்று கூறியுள்ளார். எனவே எந்த ஆய்விலும் அணுகுமுறையிலும் உலகம் தழுவிய பார்வை அவசியம். அதற்குதவும் வகையில் ஆய்வுமையங்களை ஏற்படுத்தி நல்ல திறமையுள்ளவர்களையும் ஆய்வுத்துறையில் வல்லவர்களையும் கொண்டு ஆய்வு நிகழ்த்துதல் தேவையானதாகும். மொழித்துறையிலும் இது போன்ற உலகளாவிய பார்வையுடன் கூடிய ஆய்வு அவசியம்.

பண்பாடு வளரவே படிப்பு :

இன்று படிக்கிறவர்களில் பெரும்பாலோர் நாம் ஏன் படிக்கின்றோம் என்பதையே புரிந்துகொள்ளாமல், புரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வமுமில்லாமல் படித்து வருகிறார்கள். யாரையாவது ஏன் படிக்கிறீர்கள் என்று கேட்டால் பணம் சம்பாதிக்க என்றும் பட்டம் வாங்க என்றும் கூறுகிறார்கள். யாரும் உண்மைக் காரணத்தை உணர்ந்து கொள்வதில்லை. பண்பாட்டை வளர்க்கவும் இந்தச் சமுதாயத்தை நல்வழியில்

கொண்டு செலுத்தவும் நல்ல ஆய்வுக் கருத்துக்களைச் சிந்திக்கவும் படிப்பது என்பது அறவே அற்றுப்போய்விட்டது. அறம் பொருள் இன்பம் வீடடைதலே படிப்பின் பயன் என்பதை அறவே மறந்துவிட்டோம்.

முதல் இல்லா வியாபாரம் :

'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே' என்று, நூலைப்படித்தலினால் ஏற்படும் பயனை நன்னூல் தெளிவுறக்கூறுகின்றது. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் இந் நூற்பாவிற்கு ஒருநயமான உரை விளக்கம் செய்தார். அறத்தை முதலில் செய்து – அதன்வழி பொருளை ஈட்டி – அவ்வறத்தின் வழியிலே இன்பத்தையும் அடைந்து வாழுதலே தக்கவாழ்வாகும். இவை மூன்றும் வீடுபெறுதற்குப் படிகள்போன்றவை. சிற்றின்பத்தில் ஈடுபட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக அதில் வெறுப்பும் சலிப்பும் ஏற்பட்டுப் புளியம்பழம்போல வாழ்க்கையோடு ஒட்டாத வாழ்வின் நிறைவில் வீடுபேறுகிட்டும். அதுவே இறைவனோடு இரண்டறக்கலந்து அனுபவிக்கும் பேரின்பமாகும்.

" பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல் காக்கின்ற பேதை
[கொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்பினல் மெல்லமெல்ல வுள்ள
அரும்பும் தனிப்பரமானந்தந் தித்தித்து அறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே "

என்று அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில் அருளுவது கொண்டு வீடு பேறுகிய பேரின்ப வாழ்வு பெற்றோர்க்குச் சிற்றின்ப வாழ்க்கை அறவே கைப்பாகத்தோன்றும். எனவே இந்த அறம், பொருள், இன்பமும் அவற்றின்வழி வீடு பேறடைதல் என்னும் இந்நான்குமே நூலைப்படித்தலினல் ஏற்படும் பயன்களாம். ஆனல் இன்று பலரும் முதலில் உள்ள அறத்தையும் கடையிலுள்ள வீட்டையும் விரும்புவதில்லை. இடையிலுள்ள பொருளையும் இன்பத்தையுமே விரும்புகின்றனர். இது சாத்தியமில்லை.

உலகத்தில் இன்பம் துய்க்க வேண்டுமானல் அதற்குப் பொருள் வேண்டும். பொருள் பெருக வேண்டுமானல் அதற்கு முதல் வேண்டும். முதலை வைத்து வாணிபம் செய்ய இடமாகிய கடையும் வேண்டும். முதலும் கடையுமின்றி பொருளீட்டலும் அதுகொண்டு இன்பம் அனுபவித்தலும் எப்படி சாத்தியமில்லையோ அதுபோலவே அறம், பொருள், இன்பம், வீடு என்ற

நான்கில் முதலிலுள்ள அறவுணர்வாகிய முதலும், கடைசியிலுள்ள வீடு பேருகிய குறிக்கோளும் இல்லாத மனித வாழ்வு பொருளற்றதாய் இன்பில்லதாய் முடியும். எனவே படிக்கத் தலைப்படுவோர் அறம், பொருள், இன்பம், வீடு அடைதலையே குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டும்.

எது ஈதல் :

ஔவையாரும் இந்த அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குபற்றிய விளக்கத்தை ஒருபாடலில் கூறுகின்ருர்.

" ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத் தொருமித் — தாதரவு
பட்டதே இன்பம் பரனை நினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு "

ஈதல் என்ருல் பொருளைக் கொடுத்தல் என்று மட்டும் கருத்தில்லை. பொதுவாக ஈதல் என்றிருத்தலால் தங்கள் தங்கள் தொழில்களுக்கேற்ப இயன்றதை இடைவிடாமல் கொடுத்து உதவுதலையே ஈதல் என்பது குறிக்கிறது. நாயன்மார்களின் வரலாற்றில் அவரவர்களும் அவரவர்களின் வசதி வாய்ப்புக் கேற்பத் தொண்டுகள் செய்வதைக் காணுகின்ரேம். அதுவே அறம் என்று போற்றப்படுவது.

பொருள் ஈட்டும் வழி :

பொருளை ஈட்டும் பொழுது அது வரும்வழி அற வழியாக இருத்தல் அவசியம். தீயவழியிலே வந்த பொருள் அங்ஙனம் ஈட்டியவனுக்குப் பழியையும் பாவத்தையும் நிறுத்திவிட்டுச் செல்லும். திருவள்ளுவர் இக்கருத்தில்,

" களவினல் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும் "

என்று கூறுகின்ருர். இங்கே 'கெடும்' என்பதற்கு உரை விளக்கம் எழுதிய பரிமேலழகர் முன்னே அவன்செய்த சிறு புண்ணியத்தையும் சேர்த்து இழுத்துச் செல்லும் என்று எழுதுகின்ருர். எனவே நல்வழியிலேதான் பொருளை ஈட்டுதல் வேண்டும். எஞ்ஞான்றும் காதல் இருவர் கருத்து ஒருமித்து அன்புடன் கூடிய வாழ்க்கையே இன்ப வாழ்க்கை என்று கூறுகின்ருர்.

எல்லாம் ஈசன் செயல் :

இப்பாடலிலுள்ள "பரனை நினைந்து இம்மூன்றையும் விட்டதே பேரின்பவீடு" என்னும் தொடருக்கு இம்மூன்றையும் விடுதலுக்கு மட்டும் பரனை நினைதல் என்று பொருள் கூறுமல் "பரனை நினைந்து" என்னும் இத்தொடரை இடைநிலைத் தீவகமாக்கி, "பரனை நினைந்து ஈதல் அறம்," "பரனை நினைந்து தீவினை விட்டு ஈட்டல்பொருள்," பரனை நினைந்து எஞ்ஞான்றும் காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதேஇன்பம்" என்று பொருள் காணுதல் தக்கதாம். இதுவே சரியான விளக்கமுமாகும். கடவுளின் ஆணையின்றி இவ்வுலகில் எதுவும் யாரும் இயற்ற முடியாது என்பதுண்மை. இச்செய்தி தொடக்க காலத்தில் அஃதாவது சித்தாந்த சொல்லில் சொன்னுல் பெத்த காலத்தில் தோன்ருது; சொன்னுலும் புரியாது. முத்திக்காலத்தில் அதாவது உயிர் வளர்ந்து பக்குவமடைந்த காலத்தில் 'எல்லாம் எனையாளும் ஈசன் செயல்' என்பது நன்கு புலப்படும். இதற்கு இன்று பல எடுத்துக்காட்டான செயல்களைக்கண்டு வருகின்ருேம். இதனை உளங்கொண்டு நம் ஆதீனக் குருமுதல்வர் ஒரு பாடல் அருளுகின்ருர்.

"என்செயலே என்றென் றியற்றுவதும் என்செயலும்
உன்செயலே என்றென் றுணர்த்துவதும் — நின்செயல
தாகுமே என்ன அடியேற் குணர்த்தலும் நீ
ஆகுமே சொக்கநா தா"

முதலில் என்செயலே என்று இயற்றச் செய்தவரும் அப்பெருமானே; பின்னே வளர்ந்து பக்குவமடைந்த காலத்தில் எல்லாம் தன் செயல் என்று உணர்த்தியவரும் அவரே என்பதைக் குருமுதல்வர் எளிய சொற்களால் அருளுகின்ருர்.

உயிரின் இயல்பு:

பெத்தகாலத்தில் உயிர் தன்னை முன்னிறுத்தி இறையருளைப் பின்னிறுத்திவிடும்; ஆனுல் அதே உயிர் வளர்ந்த முத்திக்காலத்தில் இறையருளை முன்னிறுத்தித் தன்னைப் பின்னிறுத்திக் கொள்ளும். இன்றும் நடைமுறையில் பல எடுத்துக்காட்டுக்களில் இதனை உணரலாம். குடும்பத்தில் எல்லோரும் சேர்ந்திருக்கும் படியான புகைப்படம் ஒன்று எடுக்க முனைகிறபொழுது சிறுகுழந்தைகள் தாங்களே முன்னே நிற்கவேண்டும் என்று ஓடிவந்து நிற்பார்கள். இதனைப் பெற்ருேர்களும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வர். அதே குழந்தைகள் வளர்ந்தபொழுது இது மாதிரி புகைப்படம் எடுக்க முனைந்தால் தங்கள் பெற்ருேர்களை

முன்னே நிறுத்தித் தாங்கள் பின்னே சென்று விடுவர். இப் பழக்கம், பண்பாடு, நம்முடைய சமயவாழ்வு கற்றுத்தந்த பரம்பரைக் குணம் என்பதை மறக்கக்கூடாது.

இளங்கலைப் படிப்பு:

இளங்கலை மாணவர்கள் ஆய்வேடு தயாரிக்க நெறிப் படுத்தும் வழிவகைகளைத் திட்டமிடுவதற்கு இன்று திட்டப் பண்ணை நடத்துகிறீர்கள். இளங்கலை, முதுகலை எல்லாம் முடிந்த பிறகு செய்ய வேண்டிய ஆய்வை இப்பொழுது இளங்கலைக்கே கொண்டு வந்திருக்கிறீர்கள். பழங்காலத்தில் கட்டுரை எழுதச் சொல்லுவார்கள். இப்பொழுது ஒருநூல் எழுதக் கூடிய பயிற்சியை இந்த இளம் மாணவர்களுக்கு ஊட்டுகிறீர்கள். இது சிந்தனை வளர்ச்சி என்றவகையில் ஏற்றுக்கொள்ளத்தக்கது, மாணவர்களிடம் இன்னதைத்தான் ஆய்வுசெய்யவேண்டும் என்று யாரும் வற்புறுத்தக்கூடாது. ஆனால் அம்மாணவர்கள் விருப்பத்திற்கே முழுமையாக விட்டுவிடவும்கூடாது. மாணவர் களின் ஆர்வத்தைக் கண்காணித்து அந்தத்துறையிலேயே அவர்களுக்கிருக்கும் ஆர்வத்தைக் கவனித்து அதன்வழி அவர் களை ஆய்வு மேற்கொள்ளச்செய்தல் நல்லது. கல்லூரியில் படிக்கவரும் மாணக்கர்களின் பருவம், எதையும் ஏன்? எதற்கு? என்று சிந்திக்கும் துடிப்பான பருவமாகும், அந்தப்பருவத்தில் அவர்களைப் பொறுப்போடும் அன்போடும் கண்டித்தும் தண் டித்தும் வளர்க்கவேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும். இந்த ஆய்வில் மொழி, சமயம், தத்துவம், கலாசாரம், வரலாறு என்பனவாகப் பல பிரிவுகள் அமைதல் நலம். இந்த ஆய்வு முயற்சி, நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் மொழிக்கும் சமய மறு மலர்ச்சிக்கும் பலன் விளையக்கூடியவகையில் பார்த்துக்கொள் ளுதல் பேராசிரியர்களின் பெரும்பொறுப்பாகும்.

வாழ்த்து :

பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. B. S. மணிசுந்தரம் அவர்கள் எதனையும் புதுமைப்பொலிவு செய்யும் ஆர்வம் கொண்டவர். அவர்தம் துணையுடன் மேற்கொள்ளும் இத்திட்டப்பண்ணையின்நோக்கம் நன்முறையில் நிறைவேறவும் ஆய்வு மேற்கொளளும் மாணக்கர்கள் நற்சிந்தனையுடனும் செயல்திறனுடனும் வளர்ந்து சிறக்கவும் அவர்களைப் பொறுப் புடன் நெறிப்படுத்தும் ஆசிரியர்கள் கடமை தவறுமல் இருந்து பணியாற்றி இந்தநாடும் மொழியும் வளரத் தொண்டாற்றி மென்மேலும் புகழுடன் விளங்கவும் எல்லாம்வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

தமிழர் வாழ்வின் இதயமாய் வாழும் ஏடு!

பேராசிரியர் இரா. செல்வக்கணபதி எம்.ஏ.,பி.எட்.,

செந்தமிழ் போற்றி, மேலாம் சிவநெறி வளர்த்துக் காத்தே,
இந்திய நாட்டில், மற்றும் ஈழத்தில், உலகில் எல்லாம்
விந்தைகள் புரிந்து, ஞான விளக்கினை ஏற்றிவைத்த
சுந்தர ஏடாம் எங்கள் சுடர்ஞான சம்பந் தம்தான் !

நாற்பத்து மூன்று ஆண்டு நடையிட்டு வளர்ந்த ஏடு !
காற்கொண்டு தமிழர்நெஞ்சில் கவிதைத்தேன்வளர்த்தஏடு!
பாற்கடல் அமிழ்தம ஒத்த பைந்தமிழ்ச் சைவ ஏடு !
நாற்பத்து நான்காம் ஆண்டில் நடையிட்டு வாழும் ஏடு !

வீறுடைத் தலையங் கங்கள் ! விமலநற் குருவின் வாக்கு !
ஏறுடைக்கவிதைக்கூட்டம்! எதிர்காலம்உ ணர்த்தும்பாங்கு!
சீருடைச் சித்தாந் தத்தின் சிறப்பினை விளக்கும் ஆய்வு !
வேறொரு ஏட்டிற் கில்லா வியத்தகு சிறப்பீதன்றோ !

சாத்திர உரைகள் கண்டு சரித்திரம் படைத்தல்; சைவத்
தோத்திரம் விளங்கித் தோன்றச் சுடர்விடும் பொழிப்புக்
[காண்டல்;
நேத்திரம் அனைய சொல்கள் நீதியின் மதிப்பு ரைத்தல் ;
காத்தன கொஞ்ச மல்ல! கால்வையார்த் துறைகள் இல்லை!

ஆதீன வரலாற் றுக்கு அடிப்படை மட்டு மல்ல;
பாதிநூற் றாண்டுக் காலப் பைந்தமிழ் வரலாற் றுக்கும்,
ஆதிநான் மறைக்கும், கற்ற அறிஞர்தம் எண்ணத் திற்கும்
ஈதிலை என்றால் வாழ்வு இல்லாமை சூழ்ந்தி ருக்கும்!

கண்ணுதல் கடவுள் ஞானக் கயிலாய மரபில் பூத்த
உன்னதத் தருமை என்னும் உயர்பெரும் ஆதீ னத்தின்
எண்ணமாய்த் தமிழர் வாழ்வின் இதயமாய் வாழும் ஏடு
பொன்விழா ஆண்டை நோக்கிப் புறப்படும் பயணம்
[வாழ்க !

திருநாவுக்கரசர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ.

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 4—11—1984 ஆங்கிலமாதம் முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப் பெற்ற கட்டுரை]

மணி 9-40. ஆதீனத் திருமடத்தை நோக்கிப் புறப்படுகிறேன். குருமணிகள் ஸ்ரீ சொக்கநாதர் பூசை முடித்துத் திருக்கோயில் வழிபாட்டுக்கு எழுந்தருளியிருந்தார்கள். அடியேன் வழக்கம்போல் அஷ்டலட்சுமிக்கட்டில் அமைந்துள்ள இனிய சிற்பங்களைக்கண்டு ரசித்துக்கொண்டிருந்தேன்.

இடப்புறம்; முதல்தூண் – மேற்குநோக்கியவாறு அமைந்த ஒரு சிப்பாய் சிற்பம். கன்னம்வரை முறுக்கிய தடித்தமீசை; கம்பீரமான பார்வை – முழுக் கால்சட்டையும் முழுக்கைச் சட்டையும் அணிந்திருக்கின்றார். இடுப்பில் தோல் கச்சு. சட்டையில் ஒழுங்கானபித்தான்வரிசை! இடக்கையில் துப்பாக்கியை ஏந்தித்தோளில் சாய்த்தவாறுநிற்கிறார்– 150 ஆண்டுகட்கு முன் வீரன் இப்படித்தான் இருந்திருப்பான்போலும்! அற்புதமான சிற்பத்தை ரசித்தேன்.

குருமணிகள் பண்டாரக்கட்டுக்குள் எழுந்தருளியாயிற்று, மணி 10. வணங்கி வழிபட்டோம்; திருநீறுபெற்றோம்; கூட்டுப்பிரார்த்தனை நிறைந்தது. குருமணிகள் உபதேசம் தொடங்குகின்றார்கள். "இன்று நவம்பர் முதல்ஞாயிறு. தமிழ்மாதம் ஐப்பசியில் அன்னபிஷேகமும் கார்த்திகையில் தீபக்காட்சியும் சோமவாரச் சங்காபிஷேகமும் சிறப்புக்கள்..........நேருவின் பிறந்தநாளும் இந்திராகாந்தியின் பிறந்தநாளும் இம்மாதம் வருகிறது. குருமணிகள் சற்றே நிறுத்தி இந்திரா அம்மையாரின் எதிர்பாராத மரணம்பற்றியருளி அவர் ஆன்மசாந்தியடையப் பிரார்த்திப்போம்" என அருளிச் செய்தார்கள். தொடர்ந்து திருநாவுக்கரசர் புராணத்தின் வாயிலாகச் சமயதத்துவக் கோட்பாடுகள் பலவற்றை ஆய்வுநோக்கோடும் வரலாற்றின் பின்னணியோடும் உபதேசித்தார்கள்.

சீகாழியில் ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் முதன்முறை அடியார்கள் புடைசூழச் சந்திக்கின்றனர். இக்காட்சியினை "அருட்பெருகுதனிக்கடலும் அன்புசெறிகடலும் கூடியதுபோன்றிருந்தது" என்றும் புண்ணியக்கண் இரண்டுபோல என்றும் பெருமான் அருளும் அகிலமெல்லாம் ஈன்ற அன்னை அருளும் போல் என்றும் சேக்கிழார் விளக்கினர். குருமணிகள் இப் பகுதிக்கு மிக இனிமையான விளக்கம் அருளினர்கள்.

"அருட்பெருகுதனிக்கடலும் அன்புசெறிகடலும் இரண்டும் ஓரேநிலையுடையன. ஞானசம்பந்தர் வலக்கண்; அப்பர் இடக்கண்; ஞானசம்பந்தர் அருட்கடல்; அப்பர் அன்புசெறிகடல்; ஞானசம்பந்தர் பெருமான் அருள்; அப்பர் நீங்காதிருக்கும் திருவருள்."

மேலும் விளக்குகிறார்கள்; "அருள் என்னும் அன்பீன் குழவி" என்றார் திருவள்ளுவர்; அருளும் அன்பும் தொடர்புடையனவே; அன்பு அரும்பு; அருள் மலர்; அவ்வளவே!

தொடர்கிறார்கள்; அப்பர், திருஞானசம்பந்தர் திருமாளிகையில் தங்கித் தோணிபுரப்பெருமானைத் தரிசித்தார். சோழநாட்டுத் திருத்தலங்களைத் தரிசிக்கவிழைந்தார். ஞானசம்பந்தரும் அப்பரும் புறப்பட்டனர். திருக்கோலக்காவரை ஞானசம்பந்தர் உடன்சென்று மீண்டார்.

குருமணிகள், திருநாவுக்கரசர் தரிசித்த தலங்களை முறையாகப் பட்டியல் அமைத்து ஆய்வுநோக்குடன் விளக்கியருளினர்கள்.

திருக்கருப்பறியலூர் (தலைஞாயிறு) திருப்புன்கூர் - திருநீடூர் திருக்குறுக்கை திருநின்றியூர்(இவைகாவிரி வடகரைத்தலங்கள்) திருநனிபள்ளி (தென்கரைத்தலம்) முதலிய தலங்களை வழிபட்டார். தலச் சிறப்புக்களையும் தலத் தேவாரப் பதிகங்களில் காணப்படும் உயர்நெறிகளையும் இடையிடையே உணர்த்தும்போது நாம் நல்லுணர்வு பெறுகின்றோம்.

திருப்புன்கூர் – நீடூர்ப்பதிகத்தில் இறைவன் பிறவாதே தோன்றிய பெம்மான் என்றும் தம்மைப்பேணுதார் தம்மைப் பேணுதவன் என்றும் கூறுகின்றார் அப்பர். திருக்குறுக்கைப் பதிகத்தில் நிறைந்துகிடக்கும் புராணமணிக் குவியலில்சண்டீசர் சாக்கியர், கணம்புல்லர் முதலியோர் வரலாறுகளை இரத்தினங்களாகச் சுட்டியருளினர்கள். திருநீடூர்ப்பதிகத்தில "இறைவனை அச்சம் காரணமாகவாவது அன்பு காரணமாகவாவது வழிபட வேண்டும்" என்ற குறிப்பை,

(தொடர்ச்சி 57-ம் பக்கம் பார்க்க)

"திருஞானசம்பந்தரும் குருநானக்கும்"

புலவர் திரு. சுயம்புகணேசன் எம். ஏ., டி. ஜி. டி.,

தமிழியற்றுறை – ஆராய்ச்சியாளர்,
காமராசர் பல்கலைக் கழகம், மதுரை – 21.

பாரதப் பெருநிலம் நிலைத்த பண்பாட்டுப் பெருமையினை உடையது. அப்பண்பாட்டின் பெருமைக்கும் அழிவின்மைக்கும் அதன் மையத் தளமாக விளங்கும் ஆன்மீகமே காரணம் எனின் மிகையாகாது.

பாரதநிலத்தின் ஆன்மீகச் சான்றோர்களுள் பைந்தமிழ்ப் பாட்டிசைத்துப் பெருமாண்பு எய்திய திருஞானசம்பந்த சுவாமிகளும் – பாஞ்சாலத் திருநிலத்துச் சீடர் மதத்தினை (சீக்கியம்) உருவாக்கிச்சிறப்பெய்திய குருநானக்தேவரும் ஆற்றிய அற்புத நிகழ்ச்சிகளும் இறைக் கோட்பாடுகளும் இவண் ஒப்பீட்டு முறையில் ஆய்வு செய்யப்படுகின்றன.

1. 0. திருஞானசம்பந்தர்

1. 1. அற்புத நிகழ்ச்சிகள்

திருஞானசம்பந்த சுவாமிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்புக்களைச் சேக்கிழார்பிரான் திருத்தொண்டர் புராணத்தின்கண் மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார். சுவாமிகளின் வாழ்க்கை இறைமையோடு தொடர்புடைத்தாகிப் பல அற்புதங்களால் ஒன்றி விளங்குகின்றது சுவாமிகள் உலகம் முழுதும் ஈன்று உவந்து அமுதருளிக் காத்தோம்பும் இறைவியின்பால் திருஞான அமுது உண்டார். இதனைப் பெரியபுராணம்,

> " தருமறை வியார்பரமர் தாள்பரவும் அன்பே
> திருமுலை சுரந்தமுது செய்தருள வித்தார் "
>
> (திருஞானசம்பந்தர். 42.)

> " ஞாலம் உய்ந்திட ஞானமுண்டவர் " (திருஞான, 150,)

எனக் கூறுகின்றது.

உலக அன்னையிடம் ஞானவமுது உண்ட பைங்குழந்தையாகிய சுவாமிகள் அக்கணத்திலிருந்து அம்மையப்பனைப்பாடி, அவன்புகழ் பரப்பும் திருப்பணியினைத் தொடர்ந்தார். ஞான அமுது உண்டதனால் ஞானசம்பந்தம் வாய்க்கப்பெற்றார். அதனால் ' திருஞானசம்பந்தர் ' ஆனார்.

" யாவருக்கும் தந்தைதாய் எனுமிவர்இப் படிஅளித்தார்
ஆவதனல் ஆளுடைய பிள்ளையாராய் ஆகித்
தேவருக்கும் முனிவருக்கும் தெரிவரிய பொருளாகும்
தாவில்தனிச் சிவஞான சம்பந்த ராயினர் " (திருஞான. 69.)

திருஞானசம்பந்த சுவாமிகள் தமிழகம் முழுதும் புனிதப் பயணம் மேற்கொண்டார். இறைவனை நினைந்து அவன் திருத் தலங்களில் பாடி உருகுகிறர். சென்ற இடந்தோறும் சிவநேசச் செல்வர்கள் அவருக்குச் சிறப்புச் செய்து சிறப்புப்பெற்றனர். ஏழை பங்காளனகிய இறைவனும் தமக்குரியபங்காகச் சுவாமிகட்குச் சில சீர்வரிசைகளைச் சிறப்புறச் செய்தான். சுவாமிகளின் திருப்பயணத்திற்குத் துணைபுரியும் வண்ணம் 'முத்தின் சிவிகை', 'மணிக்குடையும்' அளித்ததோடு நாடிவரு வோர் உடற்பசிதீர்த்தற்குப் 'படிக்காசும்' அருளினன் இறைவன்.

" ஏறுதற்குச் சிவிகை இடக்குடை
கூறி ஊதக் குலவு பொற்சின்னங்கள்" (திருஞான. 195)

" முத்தின் சிவிகை மணிக்குடை" (திருஞான. 197)

" உலகியல்பு நிகழ்ச்சியால் அணைந்ததீய
உறுபசிநோய் உமைஅடையா தெனினும் உம்பால்
நிலவுசிவ நெறிசார்ந்தோர் தம்மை வாட்டம்
நீங்குதற்கு நித்தமொரோர் காசுநீடும்
இலகுமணிப் பீடத்துக் குணக்கு மேற்கும்
யாமளித்தோம் " (திருஞான. 564)

இறைவனிடம் ஆன்மாவின் பசிநீக்கும் சிவஞானமும் உடற்பசிபோக்கும் படிக்காசும் பெற்ற சுவாமிகள் அப்பணி களைச் செவ்வனே நிறைவு செய்தருளினர்.

இறைவன் சுவாமிகளின் பொருட்டு இயற்றிய அற்புதங் களைப் போன்று சுவாமிகளும் மக்களின்பொருட்டுப் பல அற்புதங்கள் இயற்றித் திருவருள் புரிந்தார். திருஞானசம்பந்த சுவாமிகள் இயற்றிய அற்புதங்களுள் வெப்புநோயினை நீக்கி யது, அனல்வாதம், புனல்வாதம், ஆண்பனையினைக் குரும்பை காய்த்திடுமாறு அருளியது, சாம்பலை மீண்டும் பெண்ணகச் சமைத்தது ஆகியன குறிப்பிடத்தக்கன.

பாண்டிநாட்டு மன்னனகிய கூன்பாண்டியன் சிவநெறி யினின்று பிறழ்ந்து அமணர்தம் நெறியிடைச் சார்ந்தான்.

அவனை மீண்டும்சிவநெறிசேர்ப்பிக்குமாறு சொக்கநாதப்பிரானை அம்மன்னனின் கோப்பெருந்தேவியாகிய மங்கையர்க்கரசியும் அமைச்சராகிய குலச்சிறையும் இறைஞ்சினர். இறைவன் மன்னன்பக்கலில் வெப்புநோயைச் சேர்ப்பித்தான். 'நோய் தீர்ப்பார் நெறியின்பால் செல்வேன்' என மன்னன் சமணமுனிவரிடமும் ஞானசம்பந்த சுவாமிகளிடம் உறுதியளித்தான். சமணர் வெற்றி பெற்றிலர். சுவாமிகள் 'திருநீற்றுப்பதிகம்' பாடி மன்னன் நோய்நீக்கி மீண்டும் சிவநெறி சேர்த்தார்.

சுவாமிகள் சமணமுனிவர்களைப் பாண்டி நாட்டினின்றும் நீக்குதற்காக அனல்வாதம், புனல்வாதம் ஆகியவற்றில் போரிட்டு வெற்றிவாகை சூடினர்.

திருவோத்தூர்எனும்சிவபதியில் ஆண்பனைகளைக் குரும்பை காய்த்துக் குலுங்குமாறு அருளினர்.

'குரும்பை ஆண்பனை ஈனும்' (திருஞான. 980).

மயிலாப்பூரில் 'சிவநேசச் செல்வர்' எனும் வணிகர் சுவாமிகளிடம் பேரன்புகொண்ட சிந்தையராயிருந்தார். அவர்தம் தனிமகள் பூம்பாவை. பூம்பாவை சிவவழிபாட்டிற்கு மலர் பறித்துவரச் சென்றக்கால் அரவு தீண்டியதால் இறப்புற்றாள். பூம்பாவையினைச்சுவாமிகட்குமணமுடித்துத்தரும்நோக்குடையராக இருந்தமையால், சிவநேசர் அப்பெண்ணரசியை எரித்துச் சாம்பலைக் குடத்துள் செறித்துப் பூவும் பொன்நாண்களும் பூட்டி வைத்திருந்து, சுவாமிகள் மயிலாப்பூர் வந்தசமயம் அவர்பால் சேர்த்தார். சுவாமிகள் "அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்" எனப் பாடிச் சாம்பலை மீண்டும் பூம்பாவையாக உயிர்ப்பித்து அருளினர்.

1. 2. இறைக்கோட்பாடுகள் :

திருஞானசம்பந்தசுவாமிகளின் இறைக்கோட்பாடுகள் பற்றி அறிதற்கு அவர்பாடியருளிய தேவாரப்பாடல்கள் பெரிதும் துணை நிற்கின்றன.

சுவாமிகள் இறைவனை 'முதல்வன்' (தேவாரம் – பக்கம் 1 பாடல் 1), 'இறைவன்' (தே. 1. 4.). 'செல்வன்' (தே. 2. 5.), 'பெருமான்' (தே. 2. 6), 'ஆதி முர்த்தி' (தே. 52. 3), 'சிவன்' (தே. 53. 1) எனப் பலவாறான பெயர்களால் குறிப்பிடுகின்றார். இறைவன் ருத்திரன், விஷ்ணு, பிரமன் எனவரும் எண்ணிறந்த

தெய்வங்கட்கும் மேலானவனாகவும் அனைத்திற்கும் மூலப்பொருளாகவும் விளங்கும் 'பதி' என்பதனை 'முதல்வன்' எனும் பெயர் விளக்கவல்லது.

இறைவனே அனைத்துக்கும் முதலாகவும் முடிவாகவும் விளங்குகின்றான். அவன் எண்பத்துநான்கு இலட்சம் வகைப்பட்ட உயிர்கள் (பசுக்கள்) எல்லாவற்றிலும் ஒன்றியிருந்து அவற்றை வழிநடத்தும் 'பதி' ஆவான்.

" அந்தமும் ஆதியுமாகிய அண்ணல் " (தே. 221.)

" ஆவியுள் நீங்கலான் ஆதிமூர்த்தி " (தே. 52. 3)

இறைவன் அரு, உரு, அருவுரு என்னும் முந்நிலைகளில் வெளிப்படத்தக்கவன். இயற்கை இம் முந்நிலைகளையும் உடைத்து. எனவே, அனைத்திலும் அவன் உள்ளும் புறமுமாக ஒன்றியருளுகின்றான்.

" மண்ணொடு நீர் அனல் காலோடு ஆகாயம் ஆதி இரவி
எண்ணில் வரும் இயமானன் இகபரமும் எண்திசையும்
பெண்ணினொடு ஆண்பெருமையொடு சிறுமையுமாம்
பேராளன் " (தே. 64. 3)

உயிர்கள் எண்ணிறந்தன. அவை ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலவழிப்பட்டுத் தன்னிலை மறக்கின்றன. மலங்களின் (பாசம்) வயப்பட்டு அவற்றின் இயல்பாகிய பிறப்பு, இறப்பு, துன்பம், இன்பம் ஆகியவற்றை அனுபவித்து அல்லற்படுகின்றன. ஆணவம் முதலிய மலங்களை விடுத்து, அவற்றினின்று தம்மை விலக்கித் தமது இயல்பாகிய அழிவின்மை – ஆனந்தம் என்பவற்றை உணருதலே உயிர்கட்குத் துன்பமாகிய பிறவிச்சக்கரத்தினின்று விடுதலைபெறுதற்கானநெறியாகும். உயிர்கள் தனித்தியங்கும் ஆற்றலின்றிச் சார்ந்து இயங்குவன. எனவே, பதியாகிய சத் சித் ஆனந்த சொருபத்தைச் சாருதலே பிறப்புச்சக்கரத்தினின்று விடுதலை பெறுதற்கான வழியாகும். இறைவனைச் சாருதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வழிபாட்டு நெறிகளைச் சைவசித்தாந்தம் வகுத்துள்ளது. ஒவ்வொருவரும் அவரவர் வாழ்வுமுறைக்கும் வசதிக்குமேற்ப இவற்றுள் ஒன்றனை மேற்கொள்ளலாம். *

* திருமந்திரம் உயிர்களின் சார்புடைய இயல்பு (115), இறைவனைப் பற்றுதற்கான நால்வகை நெறிகள் (1443 – 1476) ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

இறைவனை மனத்தில் சிந்தித்துத் தியானித்தல், அவனது திருநாமத்தைக் கேட்டல், அதனை ஜெபித்தல், கோயில்வழிபாடு முதலியநெறிகள்சைவசித்தாந்தத்தால்வலியுறுத்தப்படுகின்றன.

"முற்று வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப் பற்று பாவமே" (தே. 1. 1)

"…………சிற்றம்பலம் தன்னைத்
தலையால் வணங்குவார் தலையானார்களே" (தே. 1. 8)

"…………கதிர்வெண் திங்கள்
சூடினையருளாய் சுருங்க எமதொல்வினையே" (தே, 3. 1)

"உடல்வரை யின்னுயிர்வாழ்க்கையாய ஒருவன்கழலேத்த
இடர்தொடரா வினையான சிந்தும்இறைவன் அருளாமே"
(தே. 51. 1)

"பாச வல்வினை தீர்த்த பண்பினன்" (தே. 98. 1)

ஆன்மவிடுதலை நாட்டமுடையோர்க்கு ஐம்புலனடக்கம் இன்றியமையாதது என்பதைச் சுவாமிகள்.

"… ……..உடல் வாழும்
ஐவரை யாசறுத்தாளுமென் பரதுவுஞ்சரமே" (தே. 51. 2)

என்னும் அடிகளில் குறிப்பிடுகின்றார்.

இறைவன் திருமுன்னிலையில் மாந்தரிடையே சாதிவேறுபாடோ, ஆண் - பெண் பால் வேறுபாடோ கருதி எவ்வித ஏற்றத்தாழ்வுமில்லை. ஆணுக்குப் பெண்சமம் என்பதனை இறைவனின் "மங்கையங்கோர்பாகமாகும்" (தே 61 3)வடிவம் உணர்த்தவல்லது. திருஞானசம்பந்தர் பார்ப்பார், பாணர், ஈழ்வர், செட்டியார் முதலிய அனைத்து வகுப்பாரிடமும் சம நோக்குடன் வாழ்ந்தவர் என்பதனை அவர்பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் தெளிவாக்குகின்றன.

2.0 குருநானக் அற்புத நிகழ்ச்சிகள் :

குருநானக் தேவர்தம் வாழ்க்கையில் அற்புதங்கள் பல ஒன்றிக் காணப்படுகின்றன. அவர்தம் வரலாறுபற்றியகுறிப்புக்களைக் கிரந்தசாஹிபு, வரலாற்றறிஞர்தம் கருத்துரைகள் ஆகியவற்றின் வழி அறிய முடிகின்றது.

குருநானக் சீக்கியம் என்னும் சமயஞ்சார்ந்த சமுதாயத்தையும் அது வாழுதற்கான இருப்பிடத்தையும் அமைத்தருளி, அச்சமுதாயத்தின் ஒப்பற்ற முதலாவது 'குரு' வாக விளங்குகின்றார்.

'நானக்' ஏழாவது வயதில் நெடுங்கணக்கினைப் பயிலப் புகுந்த கணத்திலிருந்து – இறையருளால் தெய்வக் கவிதைகளைப் புனையும் ஆற்றலினைப் பெற்றார். அவர் நண்பகலில் மரத்தடியில் துயின்றபோது மரநிழல் அகலாது குளிர்ச்சியைத் தந்தது – புற்றரையில் துயின்றுகொண்டிருந்தபோது குருநானக் தேவரின் முகத்தின் மீது கருநாகம் படம்விரித்து நிழல்தந்தது. அவர் விற்றிருக்கப்பெற்ற பட்டமரம் தளிர்த்துப்பூத்துக்கனிந்து குலுங்கியது. நானக் இறைவனிடம் அமுது அருந்தப்பெற்றவர் என்ப.

குருநானக் மெக்கா மசூதியில் 'காபா' வை நோக்கிக் கால்களை நீட்டியவாறுபடுத்திருந்தார். அதுகண்டு பொருஇசுலாமிய மத குருமார்கள் நானக்கின் கால்களைத் தறதறவென்று இழுத்து எதிர்த் திசையில் போட்டனர். நானக்கின் கால்சென்றதிசையை நோக்கிக் காபாவும் நகர்ந்தது என்பர்.

நானக்தேவர் உயிர்நீங்கிய உடலைமீண்டும் உயிர்ப்பித்தார். தொழுநோயாளியொடு அன்பொடுபழகி, அவன்றன் நோயைக் குணப்படுத்தினர். இன்னோரன்ன பல அற்புத நிகழ்ச்சிகளை நானக்தம் வாழ்வில் காணுதல் இயலும்.

2. 2 இறைக்கோட்பாடுகள் :

குருநானக் இறைவனை இசைப்பாடல்களின்வழி வழிபட்டார். அவர்தம் பாடல்கள் ஆதிக்கிரந்தம் எனக் கிரந்த சாஹிபின் முதலில்உள. சீக்கியர்மதத்தில் இறைவழிபாட்டில் ஜெபிக்கப்படும் மூலமந்திரம் கிரந்தசாஹிபில் முதலாவதாக இடம் பெறுகின்றது. அதில் குருநானக் இறைவனைப் பற்றிய கோட்பாடுகளைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் குறித்துள்ளார்.

" ஏக் ஓங்கார் ஸதிநாமு கர்த்தா புருகூ
நிர்பங் நிர்வைரு அகால மூர்த்தி
அஜூனி ஸைபான் குருப்ர ஸாதி "

(ஜப்ஜி. 1. மூலமந்திரம்)

இறைவன் ஒருவன். அவன்பெயர் ஸத். அவனே இயற்கை முழுதும் படைப்பவன். அவன் அச்சம், பகைமை, காலவரையறை, இறப்பு, பிறப்பு இல்லாதவன். அவன் எங்கும் உள்ளும் புறமுமாகி நிறைந்தசுயம்பு. இறைவன் குருவின்வழியே அருள் புரிகின்முன் என்பது மூலமந்திரத்தின் பொருள்.

ஜப்ஜி, ஆஸகிவார் என்னும் கிரந்தத்தின் பகுதிகள் இறைவனை விளக்குகின்றன. 'ஸத்' ஆகவிளங்கும்ஒன்றேதொடக்கம் நடு, இறுதி எனும் எக்காலத்தும் மாருது இருக்கவல்லது என மூலமந்திரத்திற்கு அடுத்த பாடல் கூறுகின்றது.

இறைவன் வடிவம் இல்லாதவன். மனிதரின் மனம், மொழி, அறிவு எனும் இவைகளையெல்லாம் கடந்து நிற்பவன். அவனது ஆணையின்வழி அனைத்துச் சராசரங்களும் நிகழுகின்றன என்கிறது கிரந்த சாஹிபு.

இறைவன் எண்பத்துநான்கு வகைப்பட்ட உயிர்கட்கும் உயிராக அவற்றில் ஒன்றியிருக்கின்முன். இவ்வுலகில் காணும் அனைத்தும் மாயையால் நிகழ்பவை. இறைவன் ஒருவனே நிலைத்த உண்மையாக உளன். உயிர்கள் 'யான்' எனும் அகந்தைக்கு உட்பட்டு அதனுல் கர்மத்தை இயற்றுகின்றன. அக்கர்மம் உயிர்கட்கு அதன் செயலுக்கேற்ப உடம்பைக் கொடுத்து மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து உழலச்செய்கின்றது. இப்பிறவிச் சக்கரத்தில் இருந்து விடுதலைபெறுதற்கு உயிர்கள் இறைவனை மனத்தில் உள்ளன்போடு பற்றுதல் வேண்டும். மேலும், உயிர்கள் விடுதலை அடைவதற்கு உரிய உடம்பாக மனித உடம்பே இருப்பதனுல் மனிதப் பிறவியே சிறந்தது எனக் கிரந்த சாஹிபு கூறுகின்றது.

இறைவனைப் பற்றுதற்குக் கோயில்வழிபாடு, புனிதநீராடல் வேள்வி செய்தல், புனிதப்பயணம், மேற்குத் திசைநோக்கித் தொழுதல் போல்வன தேவையல்ல. இவை எல்லாம் மனத்தில் உள்ளன்பு இல்லாதபோது வெறும்வேடமாகிவிடும் 'கலியுகம்' என்னும் இந்தக் கொடுமையும் இடும்பையும் நிறைந்தயுகத்தில் – இறைவனது திருநாமத்தைக் குருவின்வழியே பெற்று ஜெபித்தலும் தியானித்தலும் உயிர்கட்கு விடுதலையை அளிக்கவல்லது எனச் சீக்கியமதம் உறுதியாக நம்புகின்றது.

இறைவனை உள்ளன்போடு தியானிப்போர் சித்தர்கள், பீர்கள், சூர்கள், நாத்கள், நபிகள் முதலியோரை விடவும் மேலானவர்கள் ஆவர் எனக்குருநானக்கூறுகின்முர். இக்கருத்து,

" ......சிற்றம்பலம் தன்னைத்
தலையால் வணங்குவார் தலையானார்களே " (தே. 1. 8)

என்னும் திருஞானசம்பந்த சுவாமிகளின் திருவாக்கினை ஒத்துளது.

குருநானக் புலனடக்கத்தை வலியுறுத்துகின்றார். சீக்கியர் இதனைக் குறிக்கும்வகையில் அரைக்கச்சை அணிகின்றனர்.

சீக்கிய மதத்தாரிடையே எவ்விதமான சாதிவேறுபாடும் இருத்தல் கூடாது. ஆண், பெண் என்னும் இருபாலாரும் சம தகுதியினை உடையவர். குருநானக் தோட்டவேலைக்காரனையும் மாமன்னரையும் சமமாகக் கருதினார். முகலாய மன்னன் பாபர் வந்து நானக் தேவரின் வாழ்த்தலைப் பெறுதற்கு முயன்றபோது சீக்கியர்களோடு ஒருங்கே இருந்து உணவருந்தினால் ஒழிய காணுதல் இயலாது என உறுதியானார். பாபர் குருதேவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வணங்கி அருள்பெற்றுச் சென்றான் என்பர்.

3. ஒப்பாய்வு :

திருஞானசம்பந்த சுவாமிகளின் வாழ்க்கையைப் போன்று குருநானக் தேவரின் வாழ்க்கையும் அருட்சக்தியும் அற்புதமும் நிறைந்து காணப்படுகின்றது. இருவரும் இறைவழிபாட்டினைப் பாடல்களின் வழி பரப்பிய பெற்றியாளர்.

இறைக்கோட்பாடுகளைப் பொறுத்தவரையில் இருஆன்றோர்களும் ஒருமித்த விளக்கத்தினையே கடவுட்குத் தருகின்றனர். ஆனால், வழிபாட்டு முறையில் வேறுபாடு காணப்படுகின்றது. சுவாமிகள் சரியை முதலாகிய நான்கு நெறிகளையும் கூறுகின்றார். தேவர் 'தியானம்' என்னும்நெறியினை மட்டும் வற்புறுத்துகின்றார். சுவாமிகள் ஆன்மீகத்திற்கும் தேவர் சமுதாயத்திற்கும்முக்கியத்துவம் அளித்தலாகிய அணுகுமுறையே இந்த வழிபாட்டு வேறுபாட்டிற்குக் காரணமாயிற்று எனலாம்

துணைநின்ற நூல்கள் :— (1) தேவாரம் - காசிமடத்து வெளியீடு. (2) பெரியபுராணம்-காசிமடத்துவெளியீடு. (3) திருமந்திரம் - காசிமடத்துவெளியீடு (4) Sikh Religion by M. A. Macauliffe. 1963. (5) Encyclopaedia Britanica. (6) Everyman's Encyclopaedia

பீடுநடை ஏடு வாழ்க!

திரு. அரங்க. முத்துமணி

மாவட்டப்பதிவாளர் (தணிக்கை) சிதம்பரம் – 608 001

வெண்பா

சைவ மலரதனிற் சார்ந்த நறுமணமாய்த்
தெய்வத் தமிழ்பரப்பும் சீர்த்தியுடன் — மெய்யன்புக்
குன்றெனவே தோன்றும் குருமணிதன் பொற்பாதம்
என்றும் பணிந்தேன் இனிது!

வேறு

தாரகைகள் எத்தனைதான் இருந்திட் டாலும்
தண்ணிலவைப் போலாமோ? விலங்கு தன்னில்
வாரணம்போல் பிறவுண்டோ? கோயில் முன்னால்
வரவேற்புக் கொடுப்பதுவும் அதுவே; திங்கள்,
வாரமுடன் ஏடுகளும் பலவே உண்டு;
வையத்தில் உயர்ந்திட்ட சமய, சைவ
சாரத்தைக் கூறுவதும் நமது "ஞான
சம்பந்தம்" ஏடன்றோ! உண்மை – உண்மை!

குருமணிகள் அருளுரைகள்; சேக்கி ழார்தம்
குறிப்பினிலே புதைந்திருக்கும் மெய்க்கருத்தை
அருவியெனக் கொட்டுகின்ற அழகு; மற்றும்
எங்கங்கே திருவுளத்தின் கருத்து; மேலும்
கருமமெனவே கட்டுரைகள், கவிதையாவும்
கருத்தினிலே தேனூறு பாயச் செய்து
பெருமையுடன் நாற்பத்து நாலாம் யாண்டிற்
பீடுநடை போடுகின்ற ஏடே வாழி!

மதுரைக்கோயிலின் மாட்சி

'சித்தாந்தப் புலவர்மணி'

திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

ஆசிரியர் : 'திருக்கோயில்', சென்னை – 34.

உலகப்புகழ்பெற்ற எழுத்தாளரும், The Razor's Edge, Cakes and Ale, Of Human Bondage என்பன போன்ற பல புகழோங்கிய நூல்களின் ஆசிரியரும் ஆகிய, **வில்லியம் சாமர் செட் மாம்** என்னும் பேரறிஞர், பல ஆண்டுகளுக்கு முன்னர் (1937) நம் இந்திய நாட்டிற்கு வருகை தந்தார். நமது இந்திய நாட்டின்கண் உள்ள முதன்மையான நகரங்களுக்குச் சென்று சுற்றிப்பார்த்தார். அந்நிலையில் அவர் நம் தென்னாட்டிற்கும் போந்தார். 'கோயில்மாநகர்' என்னும் புகழ்மிக்க, நமது மதுரையிலுள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்கும் வந்தார். அக்கோயிலின் சிற்பத் திறனையும், செவ்விய அமைப்பினையும் கண்டு வியந்தார்! அப்போது அவர் உள்ளத்தில் எழுந்த சில எண்ணங்களையும் உணர்ச்சிகளையும், '**ஓர் எழுத்தாளனின் குறிப்புப் புத்தகம்**' என்னும் நூலில், அவர்பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

*"இந்தியாவில்எப்பொழுதுமே ஒருசப்தம்இருந்து கொண்டிருக்கிறது. இங்குள்ள மக்கள் நாள்முழுவதும், இடையீடு இல்லாமல், தங்களுடைய குரலின் உச்ச நிலையில் பேசிக்கொண்டே இருக்கின்றார்கள். அதுவும்

---

* "There is always a noise in India. People talk all day long at the top of their voices. but in the temple they talk more loudly than ever The row is terrific, People pray and recite litanies, they call to one another, vociferously discuss, quarrel or greet one another. There is nothing that suggests reverence and yet there is a vehement overwhelming sense of the divine that sends cold shivers down your spinal. In some strange way, the gods there seem to be near and living"

William Somerset Maugham,
A Writer's Note - book. p. 245

கோயில்களிலோ எப்பொழுதையும்விட இன்னும் மிக அதிகமாக உரத்த பெருங்குரலில் பேசுகின்றூர்கள். இந்தச் சந்தடியும் இரைச்சலும் மிகப் பயங்கரமாக இருக்கின்றது.

இவர்கள் பிரார்த்தனே புரிகின்றூர்கள்; துதிப் பாடல்கள் பாடுகின்றூர்கள்; ஒருவரை ஒருவர் உரக்கக் கத்திக் கூப்பிடுகின்றூர்கள்; மிகவும் உரத்துக் கூச்ச லிட்டு விவாதிக்கின்றூர்கள்; சண்டை சச்சரவுகள் புரி கின்றூர்கள் அல்லது ஒருவருக்கொருவர் அன்புரை தெரிவித்துக் கொள்கின்றூர்கள். இவ்வளவும் கோயிலி லேயே நடைபெறுகின்றன. மக்களின் பயபக்தி உணர் வைக்காட்டும் அறிகுறிகள் எதுவும் இங்குத் தென்பட வில்லே. என்றபோதிலும, இத்தனே குறைபாடுகளுக்கும் இடையேகூட, ஏதோ ஒருவகையான தெய்விக உணர்வு, நம்மை மெய்சிலிக்க வைக்கும் நிலேயில், இக் கோயில்களில் நிலவுகின்றது. எவ்வாறே ஒரு வியக்கத் தக்க வகையில், அருகிலும் உயிர்ப்புடனும் இங்குத் தெய்வங்கள் விளங்கி வருவதாகத் தெரிகின்றது ''

மதுரை மாநகருக்கு வந்து நம்முடைய அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலேத் தரிசித்து வியந்து மகிழ்ந்து உலகப்புகழ்பெற்ற அறிஞராகிய சாமர்செட் மாம் என்பவர், 'இத்தனே குறைபாடுகளுக்கும் இடையேகூட, ஏதோ ஒரு வகையான தெய்விக உணர்வு, நம்மை மெய்சிலிக்க வைக்கும் நிலேயில், இக்கோயில்களில் நிலவுகின்றது. எவ்வாறே ஒரு வியக்கத்தக்க வகையில், அருகிலும உயிர்ப்புடனும் இங்குத் தெய்வங்கள் விளங்கி வருவதாகத் தெரிகின்றது' என்று எழுதி யிருப்பது, நாம் நன்கினிது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. நம் முடைய கோயில்களில், அமைதியையும் தூய்மையையும், தெய்வ சாநித்திய உணர்வையும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய தலேயாய கடமையினே, நாம் உணர்ந்து கொள்ளுவ தற்கு, நமக்குப் பெரிதும் துணைபுரியும். நமது தெய்வ நிலேயங் களில், தூய்மையையும் அமைதியையும் ஒழுங்கினேயும் கட்டுப் பாட்டினேயும் பேணிப் பாதுகாத்து இறைவழிபாட்டினே முறை யுற நிகழ்த்தி நலங்கள் பலவும் பெற்றுய்ய, நம்மனேர் அனே வரும் முயலுவோமாக!

காலங்கள் மாறட்டும்!
கண்கள் திறக்கட்டும்!!

கவிஞர் திரு. காலகாலன்
நீடாமங்கலம்

நித்தம் நடந்தாலும்
நிலைமைகளைச் சொன்னாலும்
குத்தகையைக் கொடுக்காது
கோவில்களைச் சாய்த்துவிட்டார்.

சட்டத்தைக் காட்டிடுவார்
சந்திப்போம் கோர்ட்டிலென்பார்
திட்டமிட்டுக் கோயில்களின்
திருவிளக்கை அணைத்துவிட்டார்.

புஞ்சைமனைப் பகுதிகளைப்
போய்க்கேட்டும் தரமாட்டார்
வஞ்சனையால் வாடகையை
வழங்காது கேடுசெய்வார்.

ஏலம் எடுத்திடுவார்
ஏப்பம்விடத் தான்பார்ப்பார்
காலத்தின் கோலத்தால்
கலைக்கோயில் அழியுதுபார்.

திட்டப்படி முறையாய்த்
தினப்பூசை நடப்பதில்லை
பட்டமரம் போலாகிப்
பலகோயில் கெட்டதடா.

தேரோட்டம் தெப்பவிழா
திருக்கோயி லாண்டுவிழா
பாரோர்கள் கொண்டாடும்
பகவான் விழாக்களெல்லாம்

நின்றுவிட்ட காரணத்தால்
நெஞ்சம் புண்ணானதடா
என்றுவரும் பழையநிலை
எழில்கூட்டிப் பொலிவூட்ட.

அட்டபந் தனமில்லை
அங்கிருக்கும் யந்திரங்கள்
கெட்டதனால் அருட்சக்தி
கோவில்களில் இல்லையடா.

பழுதான கோயில்களைப்
புதுப்பிக்கப் பொருளில்லை
அழுதாலும் முன்னின்று
ஆவனசெய் வாரில்லை.

ஆண்டவனின் அமுதுக்கே
அரிசியில்லா அவலநிலை
காண்பதற்கே கண்கூசும்
கந்தலுடை அவன்மீது.

எத்தனையோ ஆண்டுகளாய்
எண்ணெய்முழுக் கில்லையடா
சுத்தமில்லாக் கோயில்களின்
சூழ்நிலைகள் மாறிடுமா ?

ஊதியமே இல்லாது
உழைக்கின்ற பணியாளர்
வீதியிலே அலைகின்ற
வேதனைக்கோ ரளவில்லை.

ஆலயத்தின் செல்வத்தை
அபகரிப்பா ரழியட்டும்
காலத்தில் கோயில்களைக்
காத்திடுவார் வாழட்டும்.

நீண்டுயர்ந்த கோபுரம்போல்
நெஞ்சங்கள் உயரட்டும்
ஆண்டவனின் அருள் சுரக்கும்
ஆலயங்கள் வளரட்டும்.

வருவாய் வருவதற்கு
வகையின்றி ஆலயங்கள்
இருள்நிறைந்து போனதனல்
இதயங்கள் துடிக்குதடா.

புல்முளைத்துக் கோயிலெங்கும்
புதர்மண்டிப் போனதடா
கல்நெஞ்சக் காரர்களின்
கண் திறப்ப தெந்நாளோ ?

சத்காரிய வாதம்

சிவபிரானின் சந்நிதியில் ஐந்தொழில்கள் நடைபெறுகின்றன, அவை முறையே ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் ஆகியவையாகும். வடமொழியில் ஐந்தொழில்கள் பஞ்ச கிருத்தியங்கள் என வழங்கப்படும். ஆக்கல் முதலியன முறையே சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோபவம், அனுக்ரகம் எனப் பேசப்படும். பெருமான் ஐந்தொழில்களை மாயையை வைத்துக் கொண்டு புரிகிறார் என்பது சித்தாந்திகளின் கோட்பாடு. அவர், இல்லாத ஒன்றை ஆக்குவதோ உள்ள ஒன்றைப் போக்குவதோ கிடையாது. ஒன்றையும் முழுவதும் உண்டாக்குவதும் முழுவதும் அழித்து விடவும் முடியாது என்ற இக்கோட்பாட்டையே சித்தாந்திகள் சத்காரிய வாதம் எனக் கூறுவர்.

— தா. ஐ. ஏசுதாஸ்.

சிவப்பிரகாச சுவாமிகள்

வித்துவான் திரு. மு. வைத்தியநாதன்

திருச்சிராப்பள்ளி

சிவப்பிரகாசர் :

செந்தமிழ் மொழியைப் போற்றிப் புரந்தவர்களில் மொழி நலமறிந்த புலவர் பெருமக்களும், அருள் உள்ளம் படைத்த அரசர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இடைக்காலத்தில் சமயத் துறையைச் சார்ந்து தமிழ் வளர்த்தவர்களில், தலைமைசான்ற புலவர் பெருமகனர், 'சிவப்பிரகாச தேசிகர்' என்னும் செந்தமிழ்த் துறவியாவர்.

தொண்டை நாடு தமிழ்மொழிக்கு வழங்கிய அருட்செல்வம் சிவப்பிரகாசர். காஞ்சிமாநகரில் வாழ்ந்த வேளாளர்குடி மக்கட்கெல்லாம் குருநாதராக இருந்த குமாரசாமி தேசிகரின் நன்மக்களில் ஒருவர் சிவப்பிரகாசர்.

தன் உடன்பிறந்தார்களுடன் பொம்மபுரம் சென்று தங்கிய சிவப்பிரகாசர், அவ்வூரில் வாழ்ந்த சிவஞானபாலய சுவாமிகளிடம் இலக்கியக் கல்வி கற்று, அவரையே தன் ஞானசிரியராகக் கொண்டு, அடித்தொண்டு செய்து பெருமையடைந்தவர்.

பன்மொழிப் புலவர் :

தருமைக்குச் சென்று தங்கி, அங்கிருந்த அருள்ஞானவள்ளலாகிய இலக்கணக் கடல் வெள்ளியம்பலவாணத்தம்பிரானிடம் முறையாக இலக்கணப் பயிற்சி பெற்றுப், பிற்காலத்தில் பல நூல்கள் இயற்றுதற்கான அடிப்படையை அமைத்துக் கொண்டவர்.

தன்னிடமிருந்த ஊக்கத்தே விளைந்த உறுதியை முதற் பொருளாகக்கொண்டு, தமிழ், வடமொழி, தெலுங்கு, கன்னடம் போன்ற பல மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றுப் பன்மொழிப் புலவராக விளங்கியவர்.

கற்பனைக் களஞ்சியம் :

தமிழ்மொழியிலுள்ள தொன்மையான இலக்கண இலக்கிய நூல்களிலும், சைவசித்தாந்த நெறியிலும், வேதாந்தநெறியிலும் வீரசைவ சித்தாந்தத்திலும், ஆகமப் பயிற்சியிலும், உலகியலறிவிலும் தனக்கு இணை சொல்ல முடியாத ஆற்றலாளராக விளங்கியவர்.

தான் இயற்றிய நூல்களிலெல்லாம் கற்பவர்களின் சிந்தையைக் கவரும் கற்பனைச் செய்திகளை மிகவும் சிறப்பாகப் படைத்துக் காட்டி, அதன்வழி மானுட வாழ்வின் உயர்விற்கு, உண்மைகளை உணர்த்திக் காட்டிய சான்றோராகிய இவர், 'கற்பனைக் களஞ்சியம்' என்று மொழித்திறம் முட்டறுத்த நல்லோர்களால் பாராட்டப் பெற்றவர்.

புதியநோக்கில் தமிழ்ப்பணி :

பள்ளியில் பயிலும் சிறுவர் முதலாக-வீட்டின்பம் விரும்பும் துறவியர்வரையுள்ள அனைவரும் பயிலும் நிலையில் ஏறத்தாழ முப்பத்துநான்கு நூல்களைத் தமிழன்னைக்கு அணிகலனாகப் படைத்தளித்த அருள்நூல் வித்தகர் சிவப்பிரகாசர். இந்த நூல்களைப் படிப்பவர் மனம், இவரின் புலமைத்திறம் கண்டு வியப்படையும்.

வடமொழியிலிருந்த 'தருக்க பரிபாஷை' என்னும் அரிய நூலைத், தமிழில் மொழிபெயர்த்துத், தமிழ்ப் புலவர்களிடம் தருக்கநூலுணர்ச்சி ஏற்படக் காரணமாக விளங்கியவர். இந்தத் துறை, புதிய நோக்கில், தமிழ் மொழிக்கு இவர் வழங்கிய நன்கொடையாகும்.

கரையற்ற கல்வியைப் பல்பிணிச்சில்வாழ்நாளில் கற்றுணர்தல் அருமையாகும். எதையும் ஆராய்ந்து அமைவுறக் கற்க வேண்டும்என்னும் கருத்துடைய சிவப்பிரகாசர், அறநூல்களில் திருக்குறளையும், அருள்நூல்களில் பெரியபுராணத்தையும், மெய்ந்நூல்களில் திருவாசகத்தையும் பல்கால் ஓதியுணர்ந்தவர்.

அணுக்கத் தொண்டர் :

திருச்சியை அடுத்துள்ள துறைமங்கலத்திலும், வெங்கனூரிலும் வாழ்ந்த தமிழ்த்துறவியாகிய இவர், மனிதர்களைப் பாடும் இயல்புடையர் அல்லர். ஆனல், ஒரு மனிதரைப் பாடி மகிழ்ந்

திருக்கிறார். அவர்தான் திருவெங்கனூரில் வாழ்ந்த அண்ணமலை ரெட்டியார் என்னும் சிற்றரசர். இவர் அடிகளாரைப் புரந்து போற்றியவர். திருவெங்கனூரில் சிவாலயம் எழுப்பியவர். தன் வாழ்நாள் முழுவதும் அடிகளாரிடம் அணுக்கத் தொண்டராக இருந்தவர். தான் எழுப்பிய சிவாலயத்தில் அடிகளாரின் திருவுருவத்தைக் கல்லில் அமைத்துப் பின்னளில் வணங்கி மகிழ்ந்தவர்.

உ. வே. சா. அவர்களின் பாராட்டு :

கடந்த நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்த கவியரசர் திரிசிரபுரம் மீனட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தம் மாணவர்களுக்குப் பாடஞ்சொல்லும்போது, சிவப்பிரகாச அடிகளாரைப் பாராட்டி மகிழ்வார் என்று, அவர்தம் தலைமாணவர் உ. வே. சா. அவர்கள், தன் 'என்சரிதத்தில்' குறிப்பிடுகின்றார்.

"என் இளமையிலேயே சிவப்பிரகாச சுவாமிகளிடத்தில் மதிப்பு இருந்தாலும் பிள்ளையவர்களிடத்தில் பழகிய பிறகு அது வரம்பு கடந்ததாயிற்று. வெங்கைக் கோவை முதலிய நூல்களைப் பாடங்கேட்டபோது, என் ஆசிரியர், அவருடைய புலமைத் திறத்தை வியந்து பாராட்டுவதைக் கேட்டுக்கேட்டு அத்துறவியர் பெருமானைத் தெய்வம்போல் பாவிக்க ஆரம்பித்தேன்"என்பது உ. வே. சா. அவர்களின் மதிப்புரையாகும்.

" புலமிக்கவரின் புலமை, புலமிக்கவர்க்கே புலனும் "

என்னும் தொடரை இங்கு நினைத்தல் தகும்.

பலதுறைப் புலமை :

அடிகளார் இயற்றிய 'சிவப்பிரகாச விசாகம்' என்னும் நூல், சைவசித்தாந்தத்தின் நுண்பொருள் அறிய மிகவும் பயன்படும். 'சித்தாந்த சிகாமணி' என்னும் நூல் வீரசைவ சித்தாந்தம் பற்றி அறிய உதவும். 'சதகமணிமாலை' என்னும் நூல் வடமொழி ஆகமக் கருத்துக்களை அறியஉதவும். 'தருக்கபரிபாஷை' என்றநூல் தருக்கநூல் உணர்ச்சிபெற உதவும், 'பிரபுலிங்கலீலை' காவியச்சுவையை அனுபவிக்கப் பயன்படும். 'வேதாந்த சூடாமணி' என்றநூல் வேதாந்தம்பற்றி அறிய விரும்புபவர்க்கு மிகவும் உறுதுணையாகும், 'நன்னெறி' என்னும் சிறுநூல் அறத்தின் மாட்சியறிய உதவும். 'திருவெங்கைக்கோவை' அகப்பொருள்செய்தியறியப்பயன்படும். குட்டிப்பெரியபுராணமாகிய

'நால்வர் நான்மணிமாலை' அருளாளர்களாகிய நால்வர் பெருமக்கள் பெருமை அறிய உதவும்.

செந்தமிழின் செவிலி :

இடைக்காலத்தில் சமண ஆதிக்கத்திலிருந்தும், வீரவைணவ மார்க்கத்தின் நெருக்கடியிலிருந்தும் சைவ சமயத்தைக் காப்பாற்றி வளர்த்த வீரசைவப்பெரியார் சிவப்பிரகாசஅடிகள், "செந்தமிழ்க் குழவிக்கு ஒரு செவிலி என்ற சிவப்பிரகாசனே" என்று புலவர் போற்றும் புகழாளராக வாழ்ந்து மறைந்தவர்.

நாவலரின் நற்சிந்தனைகள்

கல்லானது தண்ணீரில் அனேக ஆண்டுகள் அழுந்திக் கிடந்தாலும் தண்ணீர் அதனுள் நுழையாது. ஆனால் களிமண்ணோ சலசம்பந்தத்தால் வெகுசீக்கிரத்தில் மிருதுவாகி விடுகிறது. அதுபோல, பக்தனுடைய திடமான மனம் இம்சையாலும் சோதனையாலும் தடுமாற்றம் அடைவதில்லை. திடபக்தி இல்லாதவனுடைய மனமோ வெகு அற்பமான காரணத்தைக்கொண்டும் சலனம் அடையும்.

❀ ❀ ❀

பசுவினிடமுள்ள பாலானது வாஸ்தவத்தில் அதன் சரீரம் முழுவதிலும் இரத்த ரூபமாய்ப் பரவியுள்ளது. என்றாலும் அப்பசுவின் காதுகளையோ, கொம்புகளையோ பிசைந்தால் பால் வராது. அதன் முலைக்காம்புகளைப் பிடித்துக் கறக்கவேண்டும். அதுபோல் ஈசுவரன் இவ்வுலகத்தில் எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறான். ஆயினும், எல்லா இடத்திலும் அவனை உன்னால் காண முடியாது. பூர்வபக்தர்களுடைய அன்பு பக்தி வைராக்கியம் நிரம்பிய புண்ணியஸ்தலங்களாகிய கோயில்களில்தான் அவன் சுலபமாகத் தோற்றப்படுகிறான்.

— யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்.
(சன்மார்க்கபோதினி)

மூவர் தமிழில் முருகன்

தருமையாதீனப்புலவர், செஞ்சொற்கொண்டல், தமிழாகரர்,
பேராசிரியர்

டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் M. A., Ph. D.,

தமிழ்ப்பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை.

மூவர் குறிப்பு – சார்த்துவகைப் புகழ்ச்சி :

தேவார ஆசிரியர்கள் மூவரும் சிவபிரானையன்றி வேறு தெய்வத்தைத் தொழாத திருவருள் உறைப்பு உடையவர்கள்; அவர்கள் திருவாக்குகள் முழுவதும் சிவபிரான் திருவருட் புகழ்ச்சியாகவே அமைந்துள்ளன. முழுமுதற் கடவுளாகக் கொண்டு, பிறவாயாக்கைப் பெருமானாகிய சிவபிரான் திருவடிகளுக்கே தம் மனம், மொழி, மெய்களைக்கொண்டு செலுத்திய வீரர்கள் அவர்கள். கற்புடைப் பெண்டிர் தம் கணவன்மாரையன்றி வேறு நினையாத ஒருமை உடையவராதல் போன்று இக் குரவர்கள் திகழ்ந்தனர் என்று கூறுவது பொருந்தும். அம்மை, விநாயகர், முருகன் முதலிய கடவுளர் பற்றிய குறிப்புகளும் அவர்கள் அருளிய தேவாரங்களிற் காணப்படும்; ஆயினும் அவை நேர்வகையான் அன்றிச் சார்த்துவகையான் அமைந்தனவாதல், அக்குறிப்புகளைக் கூர்ந்து நோக்குங்காற் புலப்படும். அவையும் சிவபிரானின் புகழ்ச்சியாகவே தெளியப்படும்.

“ கைவேழ முகத்தவனைப் படைத்தார் ” (6-53-4)

“ தண்கடமா முகத்தினுர்க்குத் தாதை ” (6-63-9)

“ ஆனைமுகற்கு அப்பன் தன்னை ” (6-74-7)

ஆகிய எடுத்துக்காட்டுகள் அப்பர் அருந்தமிழில் காணக் கிடைப்பன. விநாயகர்க்குத் தந்தை என்று சிவபிரானைப் போற்றுவனவாக இவை உள்ளனவாதல்காண்க. “ மெல்லியலும் விநாயகனும் தோன்றக்கண்டேன் ” (6-77-8) என்ற இடமோ விநாயகரையே கண்டு களிப்புற்றுக் கவியிசைத்த பகுதி. இவ்வாறு வரும் பகுதிகள் மிகமிகச் சிலவே. எந்தவடிவத்தோடு அடியவர் ஆழ்ந்து சிந்தித்தாலும், அந்த ஆழ்நிலைத் தியானத்தால் நினைந்த வடிவுடன் தோன்றுபவர் சிவபிரானே என்பது அப்பர் கொள்கை.

" ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும் " (6-18-11)

முருகனாகவும், உமையாகவும், விநாயகராகவும் தோன்றுபவர் எல்லாம்வல்ல தனித்தலைவராகியசிவபிரானேஎன்பது உணர்த்த வரும் கருத்து என்று கூறுவது தவறாகாது.

அப்பர் அறிவிப்பன :

முருகப்பிரானுக்கு ஆறுமுகங்கள் ; கடம்ப மலர் மாலை அணிந்த குழந்தைக் கடவுள் குமரன் ; அப்பிரானை மகனைக் கொண்டவர் சிவபிரான் ; குறவியாகிய வள்ளியை மணந்த தலைவன் குமரக் கடவுள் ; மயிலை ஊர்தியாக உடையவன் முருகவேள் ; போரில் சூரபதுமனைக் கொன்றவன் செவ்வேள் ; சரவணம் என்னும் நாணற்காட்டில் கிடந்தமையால் சரவணன் என்ற திருப்பெயரைக்கொண்டவன் குமரன் ; திருக்கையில் வேலாயுதத்தை உடையவன் ஆகிய குமரன் பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளைக் கடவுள் ; கோழிக் கொடியை உடையவன். இவ்வாறு அப்பர்தேவாரத்துக் காணப்பெறும் தொடர்களைக் கூர்ந்து நோக்கிற் புலப்படும் கருத்துக்கள் பல. வள்ளி மணாளன், வேலன், அறுமுகன், கடம்பன், குமரன், கோழிக் கொடியோன், சரவணத்தான், மயிலூர்தி முருகவேள் என்ற திருப்பெயர்களால் அடிகளார் செவ்வேளைக் குறிக்கின்றனர்,

" ஆறு கொலாம் அவர் தம்மகனார் முகம் " (4-18-6)

" சேந்தனை மகனாக் கொண்டார் " (4-43-8)

" குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள் " (4-60-3)

" முன்னையார் மயில் ஊர்தி முருகவேள் " (3-16-7)

" நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன் " (5-19-9)

" சமரசூரபன்மாவைத் தடிந்த வேற் குமரன் " (5-64-10)

" சரவணத்தான் கைதொழுது சாரும் அடி " (6-6-1)

" பன்னிரண்டு கண்ணுடையபிள்ளை தோன்றும் " (6-18-4)

" நம் செந்தில் மேய வள்ளி மணாளற்குத் தாதை " (6-23-4)

" வேற் குமரன் தாதை " (6-75-7)

" கோழிக் கொடியோன் " (6-89-2)

அப்பர் குறிப்புக்களில், தெய்வயானை மணவாளன் முருகன் என்ற குறிப்பு இல்லை; வள்ளிக்குக் கணவன் என்ற குறிப்பே காணப்படுகின்றது. முருகப்பிரான் சிவபிரானைத் தொழுது போற்றியமை குறிப்பிடப்படுகின்றது. "நம் கடம்பன்", "நம் செந்தில் மேய" என்ற தொடர்களில் 'நம்' என்றசொல் முருகப் பிரான் நம்முடைய வழிபாட்டுக்குரியவன் என்ற அண்மைநிலை சுட்டப்படுதல் நோக்கத்தக்கது.

ஆளுடைய பிள்ளையார் அறிவுறுத்துவன :

திருஞானசம்பந்தர் தேவாரத்தும் முருகக்கடவுள் பற்றிக் கூறப்படும்செய்திகள் இவற்றோடு ஒத்தனவே. பெருமைக்குரிய முருகனுக்குத் தாதையாவார் சிவபிரானே; குறவர் மகளாகிய வள்ளிக்கு மணவாளன் செவ்வேள்; போராற்றல் உடைய வேற்படை உடையவன்; தோகை தழைத்த மயில் ஏறியவன் முருகவேள் என்பன தொகுத்துக் காணத்தக்கன.

அறுமுகஇறை, கந்தன், குமரன், குமரவேள், சாமி, சேந்தன், சேய், மயிலூர்தி, முருகன், மைந்தன் என்ற திருப்பெயர்களால் பிள்ளையார் திருமுருகனைக் குறிக்கின்றனர். குறிஞ்சிநிலத்து மகளிர் குறிஞ்சிப் பண்பாடி இப்பெருமான் திருப்புகழைக் கூறி மகிழ்வர்.

" தாதையைக் காட்டுவர் மாமுருகன் " (மொழிமாற்று-8)

" குறவனார் தம்மகள் தம் மகனார் மணவாட்டி "
(எதிர்கொள்பாடி-6)

" ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றி மால்
கூறினார் அமர்தரும் குமரவேள் தாதை "
(திருத்தென் குடித்திட்டை-6)

" மடமயில்ஊர்தி தாதை யென்று நின்று தொண்டர்
மனநின்ற மைந்தன் " (திரு நறையூர்ச்சித்தீச்சரம்-2)

" வள்ளிமுலைதோய் குமரன் தாதை "
(அரிசிற்கரைப்புத்தூர்-6)

" தழைமயிலேறவன் தாதையோதான் "(இராமனதீச்சரம்-3)

நம்பியாரூரர் நவில்வன :

சுந்தரர் தேவாரத்து வரும் முருகப் பெருமான் பற்றிய செய்திகளும் இவற்றை ஒட்டியனவே; குறவர் மங்கையாகிய

வள்ளியம்மையின் கேள்வன் முருகன்; தாரகாசுரனைப் பொருது வென்ற திருவருள் வலம் உடையவன் செவ்வேள்; மலையரையன் மகளாகிய உமையம்மை பெற்ற சிறுவன் முருகன்; குமரன், திருமால், பிரமன் ஆகிய தேவர்கள் சிவபிரானைத் திருவாரூர்த் திருத்தலத்தில் வணங்குவர்; முருகவேளுக்குத் தாதை என்ற பெருமைக்குரியவன் சிவபிரான்; – என்பனவே சுந்தரர் தரும் குறிப்புக்கள் :

" குறவர் மங்கைதன் கேள்வனைப் பெற்ற
கோனை நான் செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறைவிரியும் நள்ளாறனை " (திருநள்ளாறு–7)

" பொரும்பல மதுடையசுரன் தாரகனைப் பொருது
பொன்றுவித்தபொருளினைமுன்படைத்துகந்த புனிதன் "
(கலயநல்லூர்–9)

" மலையரையன் பொற்பாவை சிறுவனையும் தேறேன் "
(நாகைக் காரோணம்–9)

" குமரன் திருமால் பிரமன் கூடிய தேவர் வணங்கும்
அமரன் இருப்பதுமாரூர் அவர் எம்மையுமாள்வரோ
கேளீர் " (திருவாரூர்–9)

" பொன்னனை மயிலூர்திமுருகவேள் தாதை" (திருவதிகை–8)

மூவர் குறிப்புக்கள் : ஒப்பீடு :

முருகன் குறிஞ்சிக்கடவுள் என்பதோ, பரிபாடலிற் கூறப் பெற்ற ஏனைய முருக வரலாறுகளோ விரிவாகத் தேவார மூவர் திருப்பாடல்களிற் காணப்பெறவில்லை என்பதுநோக்கத்தக்கது. முருகப்பெருமான் சிவபெருமானைத் தொழுதனன் என்பது அப்பர், சுந்தரர் திருப்பாடல்களில்மட்டும்காணப்பெறுகின்றது. சூரபதுமனைக் கொன்றமை அப்பராலும், தாரகனை வதைத்தமை சுந்தரராலும் சொல்லப்பட்டுள்ளன. மயில் ஊர்தி பற்றிச் சம்பந்தர் குறிப்பிட்டமை ஒருவகையில், மறைபொருளாகச் சூரபதுமனை வென்றமையைச் சுட்டுகின்றது என்று கூறலாம். மூவருமே வள்ளியம்மை மணவாளனாகக் குமரக்கடவுள் விளங்குகின்றமையைக் குறிப்பிட்டனர்; தெய்வயானை அம்மை திருமணம் குறிப்பிடப்பெறவில்லை. அன்பின் ஐந்திணைநெறியில், குறிஞ்சிக்கடவுள் வள்ளியைக் கூடி மகிழ்ந்தவன் ஆதலின், தமிழ் நலம் கெழுமிய அந்நிலை மட்டும் சிறப்புறச் சுட்டியமைக்குக் காரணம் ஆகலாம். அன்றியும் தெய்வ நலம் பொருந்திய

மாமுருகன், மண்ணுலகிற்கு எழுந்தருளி எளிய மலைக்குறவர் திருமகளை மணம் கூடியமை அப்பெருமானுடைய எளிமைத் தன்மைக்கு (சௌலப்பியம்) எடுத்துக்காட்டாக அமைவதனல், சமயக் கொள்கைகளைத் தமிழகத்துப் பரப்ப முற்பட்ட இக் குரவர்கள் இதனை மட்டும் சுட்டி மகிழ்ந்திருத்தலும் கூடும். சைவசமயக் கொள்கைகளில் மக்கள்விரும்பி ஏற்றுக்கொள்ளத் தக்க பல்வேறு நிலைகளில்இதுவும்ஒன்று என்பது கருதத்தக்கது. கடுந்துறவைச் சமணர்கள் மேற்கொண்ட காலம் சங்ககாலத் துக்குப்பிற்பட்ட இச்சமயகுரவர் காலம்என்பது வரலாற்றறிஞர் கண்ட முடிவு. ஆண் பெண்ணுடன் கூடி மகிழும் இல்லற வாழ்வும் இறைவனுக்கு உகந்ததே என்பதே இக்குரவர்கள் அருட்செய்திகளில் தலைமை சான்றது ஆதலின், அதற்கேற்பச் 'செவ்வேள் காதலித்துக் குறப்பெண் ஒருத்தியைக் கடிமணம் புரிந்த மணவாளன்' என்ற குறிப்பை எடுத்துக்காட்டிக் கொள்கை விளக்கம் காட்டினர் என்று கொள்ளுதலும் கூடும்.

இனி, செவ்வேள் சிவபிரானை வழிபட்டமையை இவ்வரு ளாளர்கள் இயம்பியமைக்குற்ற அடிப்படை யாதென்று சிந்தித்தால் ஓர் உண்மை புலனுகின்றது. சிவபிரான் தலைமைக் கடவுள் என்பதும், 'மகாதேவன்' என்ற பெயருக்கேற்பத் தலைமைசான்றபெருங்கடவுள் என்பதும் மக்களுக்குஉணர்த்தத் தக்க உண்மைகள்; அன்றியும், இறைவனுகிய சிவபிரான் மக்கள் விரும்பி வழிபடும் உருவங்களில் எல்லாம் வந்து அருள் செய்யும் பேரிரக்கமும், பெருங்கருணையும்உடைய அருளாளன் என்பதனை உலகிற்கு உணர்த்தவும் இக்குரவர்கள் முருகன் தொழுத குறிப்பினைக் கையாண்டனர் என்றுகருதலாம்.

> " நானுவித உருவாய்நமை யாள்வான் நணுகாதார்
> வானுர்திரி புரமூன்றெரி யுண்ணச்சிலை தொட்டான் "
>
> (வேணுபுரம்-5)

என்றவிடத்துத் திருஞானசம்பந்தர் முதலடியிற்குறித்தபொருளை ஒப்பிட்டு ஊன்றி உணருங்கால், இவ்வுண்மை தெளிவாகும். முருகப்பெருமானுய் வருவோனும் சிவபெருமானே என்று கூறு வதும், முருகப் பெருமான் சிவபிரானைத் தொழுதான் என்று கூறுவதும் முரண்படத் தோன்றுவனவாக மேம்போக்காய்ப் பார்ப்போர்க்குத் தோன்றும். எல்லாம் அவனே என்ற கொள் கையின் மறுநிலையே இது என்பது சிந்திப்பார்க்கு விளங்கும்.

இம்முருகனையே முதற்பொருளாகக் கொண்டு வழிபடும் கௌமாரம், நாயன்மார் வாழ்ந்த காலத்திற்கு மிகப்பிற்காலத்து

விரிந்திருக்கவேண்டும். நாயன்மார் குறிக்கும் அறுவகைச் சமயங்கள் கௌமாரம் முதலியவற்றின் வேறுவன என்பதும் இங்குக் கருதி உணரத்தக்க ஓர் உண்மை.

> " விரிசடை விரதிகள் அந்தணர் சைவர் பாசுபதர் கபாலிகள்
> தெருவினிற் பொலியும் திருவாரூர் அம்மானே "
>
> (திருவாரூர் – சீகாமரம்-3)

என்றவிடத்து அப்பர் அடிகளார் திருவாரூர்த் தெருவினில் தம் காலத்துக்கண்ட வெவ்வேறு கடவுட்கொள்கை (அகச் சமயம்) யினரைச் சுட்டுவதை இவ்விடத்து ஒப்பு நோக்குக.

அருணகிரியார் திருப்புகழ் விரிவு :

தொல்காப்பியம், " சேயோன் மேய மைவரை உலகம் " என்றுகூறுவது முருகன் குறிஞ்சிக்கிழவன் என்பதனைவிளக்கும். ஆனால் தேவாரமூவர் குறிஞ்சிநிலத்துத் தலங்களைக் கூறும்போது " சிவன்என்ன முருகன்பற்றிய குறிப்புக்களை அங்குப் புனைந்து பாடிடவில்லை. இக்கட்டுரையில் முதலிற் குறித்ததுபோல் அவர்கள் உளமெலாம் சிவமயமாக இருந்தமையே இதற்குக் காரணம். அனைத்தும்சிவனே; "எல்லாம் சிவன் என்ன நின்றாய் போற்றி"(அப்பர்)ஆதலின், இதுகுறிஞ்சிஎன்றோ, இதற்கு உரிய நிலத்தெய்வம்முருகன் என்றோ அவர்கள்சிந்தனையில்நினைவுகள் தோன்ற வாய்ப்பில்லாது போயிற்று. ஆதலால் அக்குறிஞ்சித் தலங்களில் சிறப்பாக முருகன் பற்றிய குறிப்புக்களைப் பெற வாய்ப்பு இல்லை. நாயன்மார் காலத்திற்குப்பின்னே–ஏறத்தாழ ஆறு நூற்றாண்டுகளுக்குப் பின்னே தோன்றித் திருமுருகன் திருப்புகழ் இசைத்த அருணகிரிநாதர் முருகன் வீற்றிருக்கும் தலங்கள் தோறும் சென்று தனியே செவ்வேள் தாள் பரவலாயினர். திருஞானசம்பந்தரை முருகனாகவே பாவித்துக்கொள்வர் அருணகிரிநாதர். திருஞானசம்பந்தரையே தமக்கு முன்னோடித் தலைவராக அமைத்துக் கொண்டவர் என்பது திருப்புகழால் விளங்கும். சிவபிரான்மீது பதினாறாயிரம் பாடல்கள் பாடிய புகலிவித்தகர் (சம்பந்தர்) போன்று முருகப்பெருமான் மீதுபதினாறாயிரம் பாடியவர் அருணகிரிநாதர் என்கிறது வரலாறு; பின்வரும் திருப்புகழும் இதனைக் குறிப்பாகக்கூறும் :

> " பூமியதனிற் ப்ரபுவான புகலியில்வித்தகர் போல
> அமிர்தகவித் தொடைபாட அடிமைதனக் கருள்வாயே

சமரிலெதிர்த் தசுரர்மாளத் தனியயில்விட் டருள்வோனே
நமசிவயப் பொருளானே ரசதகிரிப் பெருமாளே ”

(திருக்கயிலைத் திருப்புகழ்.)

இதனுள் நமசிவய என்ற திருவைந்தெழுத்துப் பொருளாக உள்ளவன் என்று முருகனைப் போற்றுவதும் காண்க. திருப்புகழில் வரும் திருமுறைக் கருத்துக்களும், தொடர்களும்பற்றிய தனி ஆய்வு செய்தல் ஒப்பீட்டுவகையில் அவற்றிடையே உள்ள ஒருமைப் பாட்டினை உணர்ந்திடத் துணை புரியும்.

மூவர் தமிழில் காணப்பெறும் குறிப்புக்கள் இவர்தம் இசைப்பாடல்களில் விரிவுபெறலாயின என்று கருதலாம்.

குருமணியின் அருள்மொழி

வேற்றுமையில் ஒற்றுமை

கடவுள் நம்பிக்கை கொண்ட சமயங்கள் ஒன்றோடொன்று பூசலிட்டுத் தாழ்ந்துபோவதைத் தவிர்த்து, எல்லாச்சமயங்களும் தமது சமயக்கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் அவற்றில் அழுத்தமாக இருந்துகொண்டு – அதேநேரத்தில் வேற்றுமையில் ஒற்றுமை என்னும் நிலையில் ஒன்றாய்நின்று சமூதாயத்திற்குப் பொறுமையுடன் பாடுபடவேண்டியது இக்காலநிலையில் மிகமிக அவசியமாகும். அரசியல் நிலையில் கூட்டுச்சேரா நாடுகள், இணைந்துநின்று தமக்குள் ஓர் ஒற்றுமையும் பாதுகாப்பும் கொண்டு வளர்வதுபோல, ஆன்மீகநிலையில் உலக அளவில் எல்லாச்சமயங்களும் இணைந்து தமக்குள் ஓர் இணக்கங்கொள்வதும், எந்தநேரத்தில் எந்தச்சமயத்திற்கு ஊறு ஏற்பட்டாலும், அனைத்தும் ஒன்றாய்நின்று அதனைக் களைந்து பாதுகாக்க வேண்டியதும் இன்றைய நிலையில் அவசியமானதும், மிகமிக அவசரமானதும் ஆகும்.

கடிதம் :

தா, குருசாமி,
397-வடக்குமாசிவீதி

மதுரை
14—11—84

ஐப்பசி ஞானசம்பந்தம் பெற்றேன். 'தலையங்கம்' குரு முதல்வர் பொன்மொழியோடு 'தன்னினம்முடித்தல்' உத்தியை நினைவூட்டியது. பண்டிதமோதிலால்நேரு கூறிய பொன்னுரை 'உழைத்துக் கடமைபுரிபவர் ஒருவகை — பிறருழைப்பால் உயர்ந்து வாழ்பவர் மற்றொருவகை' எனக்காட்டி முதல்வகை மனிதராக வாழ வழிகாட்டும் வரிகள் உள்ளத்தில் பதிந்தன.

நேரு குடும்பம் தியாகத்திற்குப் பெயர்பெற்றது எனப் பரம் பரை ஆட்சியா? என்ற வினவுக்கு முற்றுப்புள்ளிவைத்திருப்பது அரசியல்வாதிகளும் அறியா அறிவுரையாகும்.

குருமகாசந்நிதானமவர்கள் தேசியக் கல்லூரியில் அருளி யுள்ள தத்துவ உரை ஆராய்ச்சிமிக்கது. 'Philosophy' என்ற சொல் 'ஞானத்தை நேசித்தல்' என்றும், 'தத்துவம்' என்ப தற்கு 'அது நீ' என்றும், 'தத்துவமஸி' 'அதுநீ ஆகின்றாய்' என்றும், 'இது ஒரு மகாவாக்கியம்' என்றும் அருளியிருப்பன மகிழ்வைத்தந்தன.

'சமயம்' சூழ்நிலைக்கேற்பத்தோன்றுகின்றன என்ற விளக் கத்தில் இஸ்லாம்சமயத்தில் வட்டிவாங்குதல் கூடாது என்பதன் விளக்கமும், செல்வந்தர் மோட்சம் போகாததன் விளக்கமும், தானாக இறக்கும் புலாலை உண்ணும் புத்தநெறி விளக்கமும், பெண்ணை வெறுக்கும் ஜைனர் நிலை விளக்கமும் பொன்போல் போற்றிவைக்கத்தக்கன.

'மக்கள் - மாக்கள்' விளக்கம் உச்சநிலையான மகிழ்வை யும் இன்புறுதலையும் அளித்தது. அதேபோல மக்கட் சுட்டும் அரிய விளக்கம் தருகிறது.

சமய உண்மைகள் முழுவதும் விளக்கப்படுவது வியப் பைத்தருகிறது. கி. லட்சுமணன் எழுதிய இந்திய தத்துவங் களைப் படிக்க ஊக்குதல் அளித்த அருள்மொழியையே இங்கு எங்கட்குச் சுருக்கி வழங்கியிருப்பது தமிழர் தத்துவப் பெரு மையை அறிய வாய்ப்பாகிறது, 'இராசாங்கச் சமயம்' எவ்வா றாயிற்று எனச்சுட்டி, மெய்ஞ்ஞானம் கண்ணுக்குப் புலனாகாது – கருத்துக்குப் புலனாகும் அகப்பொருளை ஆய்வுசெய்வது – என மையநோக்கோடு – உபதேசித்தருளிய வாக்கியங்கள் தமிழ்ப் பல்கலைக் கழகம் தலைமேற் சூடத்தக்கனவாகும்.

அட்டைப்பகுதியில் பிரதமர்இந்திராகாந்தியின் வாழ்க்கைக் குறிப்புகள் வகுப்பறைக்குப் பயன்படத்தக்க களஞ்சியம்.

கதிரவன் குடும்பம்

2. பூமி – II

பூமியின் உட்புறம் எப்படி உள்ளது ?

அது நம்மைச்சுற்றிலும் நாம் காண்கின்ற நீர், மணல், மண், பாறை, உலோகங்கள் மற்றும் சுரங்கங்களிலிருந்து எடுக்கப் படும் பொருள்கள் ஆகியவற்றைப் போன்று இருக்கவேண்டும் என்று நாம் கருதக்கூடும். ஆனால் மேலே கண்டவாறு நாம் தெரிவித்ததெல்லாம் பூமியின் மேல் ஓட்டைப் பற்றியதே யாகும். பூமியின் மேலோடானது கெட்டியான, குளிர்ந்துபோன மேற்புற ஓடு. நாம் வாழும் தரைப்பகுதியின் பருமன் சுமார் மூன்றுமைல் முதல் இருபத்து ஐந்து மைல்களுக்கு மேல் கிடையாது. நாம் வாழும் பூமியினை ஓர் ஆப்பிள் பழத்தோடு ஒப்பிடுவோமானல், அந்தப்பழத்தின் மேல்தோல் எவ்வளவு மெல்லியதோ, அதேபோன்று பூமியின்பரிமாணம் அதன் புறணி (மேலோடு) போன்றே உள்ளது.

இனி, பூமியின் எஞ்சிய உட்பகுதியைப் பார்ப்போம் – அதனை நம்மால் எப்படி அறியமுடியும்? உலகின் மிக ஆழமான சுரங்கங்கள் ஒன்று அல்லது இரண்டு மைல் ஆழ அளவே யுள்ளன. உலகின்மிக ஆழமான எண்ணெய்க் கிணறுகளும் அதிகபட்சம் நான்கு மைல் ஆழம்தான் உள்ளன. எனினும் பூமியின் உட்புறம் நாம் காணும் பொருள்களிலிருந்து பெரிதும் மாறுபட்டதே ஆகும்.

பூமியின் எடை என்னஎன்பது நாம் ஏற்கனவேபார்த்தோம். பூமியின் உட்புறம் மட்டும் மேற்பரப்பில் காணப்படும்பொருள் களால் ஆனதாக இருக்கும்பட்சத்தில், பூமியின் மொத்தஎடை, அஃது உண்மையில் இருப்பதில் பாதியாகத்தான் இருக்கும். பூமியின் உட்புறத்தில் என்ன இருந்தாலும் அது மிகவும் கன மாகத்தான் இருக்க வேண்டும்.

விண்கற்கள் (Meteorities) எனப்படுபவை, நீண்ட காலத் துக்கு முன்னர் உடைந்து போன ஒரு கிரகத்தின் துண்டுப் பகுதிகள் என வான ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்கள்

விண்கல் ஒருதுண்டைப் பரிசோதித்துப் பார்த்தால், ஒரு கிரகத்தின் உட்புறம் எப்படி அமைந்துள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். அப்படி ஆராய்ந்து பார்த்ததில், சில விண்கற்கள் இரும்பினாலும், சில கல்லாலும் ஆனவை எனத் தெரியவருகிறது. எனவே நமது கிரகத்தின் உட்புறம் இரும்பையும் கல்லையும் கொண்டதாக இருக்கவேண்டும் என்று நாம் ஊகிக்க இடம் உண்டு.

பூமியின் உட்புறம் எப்படிப்பட்டது என்று அறிய அதனினும் – நல்ல வேளையாக – நேரிடைச் சான்றுகள் உள்ளன. பூமியின் உட்புறத்தில் உள்ள அழுத்தம் (density) ஒரு சதுர அங்குலத்துக்கு மிலியன் கணக்கான டன் என்பது அதன் எடையின்மூலம் அறிகிறோம். நாம் பூமியின் மேற்பரப்பிலிருந்து உட்புறமாக அரைமைல் ஆழத்துக்குச் சென்றால் போதும். சுரங்கப்பாதையின் சுவர்கள் உள்சரிந்து விழுகின்றன. கற்றரை புடைத்து மேல் எழுகிறது. மர உத்திரங்கள் – பல்குத்தும் குச்சிகளைப்போன்று சுக்குசுக்காக உடைகின்றன. அழுந்திக் கிடக்கும்பாறையில் சுரங்கத்தொழிலாளி செலுத்தும் துரப்பணக் கருவியை அநேகமாக மீட்டு எடுக்கமுடிவதில்லை. பூமிக்குள் மேலும் ஆழத்தில் சென்றால், வெப்பமும், அழுத்தமும் அதிகரித்துக் கொண்டே போகின்றது. முடிவில், மிகக் கெட்டியான கல்லும் திரவம் போல உருகி ஓடும் கட்டம் வருகிறது. ஓர் எரிமலை வெடித்துக் கக்கும்போது, அது பூமியின் வெப்பம் மிக்க உட்புறத்தில் சேறு போன்று மாற்றப்பட்டுப் பாறையைத்தான் மேற்புறத்துக் கொண்டுவந்து வெளியே தள்ளுகிறது. நமது பூமியாகிய கிரகம் (planet) மேற்பரப்பில் எவ்வளவு உறுதியாகவும் கெட்டியாகவும் இருப்பினும், உட்புறம் ஆழத்தில் மிருதுவாகவே உள்ளது.

பூமியின் புறணிக்கு (Outer skin) அடியிலுள்ள பாறைகள் விரிசல் விட்டுச் சரியும்போது, பூகம்பங்கள் (Earthquakes) ஏற்படுகின்றன. அங்ஙனம் சரியும்போது, தோற்றுவிக்கப்படும் அதிர்வுகள் (Vibrations), பூமியின் மேற்பரப்பை வந்தடைந்து பெரும் பெரும் சேதங்களை உண்டாக்குகின்றன. 1755 –ஆம் ஆண்டில் போர்ச்சுகலில் ஏற்பட்ட ஒரு பூகம்பம், லிஸ்பன் நகரை அழித்தது. மக்களில் 60,000 பேர்களைக் கொன்று விழுங்கியது.

அப்படி ஏற்பட்டு வெளிப்படும் அதிர்வுகள் – அந்த அதிர்ச்சி அலைகள் புறப்பட்ட இடத்திலிருந்து பல ஆயிரக் கணக்கான மைல் தொலைவில், நில அதிர்வுப் பதிவுக்கருவி

(Seismograph), அந்த அலைகளைக் கிரகித்துப் பதிவு செய்கிறது. வானொலிப்பெட்டிஎவ்விதம்வானொலி அலைகளைக்கிரகிக்கிறதோ, ஏறத்தாழ அதேபோன்று, மேற்படி நுட்பமான கருவி நில அதிர்ச்சி அலைகளைக் கிரகிக்கின்றது. பூமியின் ஊடே நாம் பூகம்ப அலைகளைப் பின் தொடர்ந்து செல்ல நில அதிர்வுப் பதிவுக்கருவி நமக்கு உதவுகிறது. அந்தஅலைகள் வெவ்வேறான பகுதிகளைக் கடக்கும்போது, அவற்றின் வேகம், செல்லும்திசை ஆகியன மாறுகின்றன. அந்த மாறுதல்களை நில அதிர்வுப் பதிவுக் கருவியானது பதிவுசெய்து, ஓர் அலை திடப்பொருளினூடே செல்கிறதா, அல்லது திரவத்தினூடே செல்கிறதா என்பதைப் படம் எடுத்துக் காட்டுகிறது. இந்த அலைகளின் பலவகைப்பட்ட பாதைகளை அறிவதன் மூலம், நாம் பூமியின் உட்புறத்தைச் சற்றுத் தெளிவாக அறிய இயல்கிறது.

பூமியின் மேற்பரப்பின் மீது மெல்லிய புறணி உள்ளது. அதன் மீது தான் நாம் வசிக்கிறோம். புறணிக்கு அடியில் கவசம் (Mantle) என்னும் பகுதியுள்ளது. மிகக்கனமான பாறையிலான அது சுமார் 2,000 மைல் பருமனுக்கு உள்ளது. அக் கவசம் சுமார் 4,000 மைல் ஆழமுள்ள ஏரியின் மீது மிதக்கிறது. அந்த ஏரியானது ஒருகால், இரும்பும், நிக்கலும் சேர்ந்த கலவையாக இருக்கலாம். இப்போது நாம் பூமி ஏன் அவ்வளவு கனமாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்கிறோம். பூமி இரும்பு இதயத்தைக்கொண்டது எனப்புரிந்து கொள்கிறோம்.

மையத்தில் ஒரு வகையான இரும்புப்பாகு; அதைச் சுற்றி மென்கல்லால் ஆன கனத்த உறை. அதற்கும்மேல் ஒரு மெல்லியதோல். பூமி எவ்விதம் கச்சிதமானதோர் முட்டையாக அமைந்துள்ளது?

ஆரம்பத்தில் தூசு – முகில் (Dust – cloud) இறுகி, பூமி உண்டாகியபோது, அநேகமாக அஃது இரும்புக்கல், லேசான பொருள்கள் ஆகியன ஒன்றாகக் கலந்த குளிர்ந்த அவியலாக இருந்திருக்கலாம். பிறகு தூசு–முகில் எஞ்சி நின்ற பொருள்கள் பூமியின் மீது பொழிய ஆரம்பித்து, பூமியின் பரிமாணத்தை அதிகரித்துச் சென்றன. பூமி மேலும் மேலும் பெரிதாகியபோது, அதன் அழுத்தம் அதிகரித்தது – வெப்பமும் அதிகரித்தது. இறுதியில் பூமி முழுதுமே உருகி, மேலும் கீழும் ஓடும் ஒரு நெருப்புக் குழம்பு உருண்டையாகியது. பூமியின் உட்பகுதியானது பல அடுக்குகளால் ஆனது. ஒவ்வோர்அடுக்கும் வெவ்

வேறு பொருள்களைக் கொண்டது. கவசம் (Mantle) அநேக மாக உருகிய பாறையால் ஆனது. உள்ளகம் (Core) அநேக மாக அடர்த்தியாகத் திரவ நிலையில் உள்ள இரும்பும் நிக்கலு மாகும். கனமான பொருள்கள் அடிமட்டத்துக்கு அமிழ்ந்தன. லேசான பொருள்கள் மேலே வந்தன. இரும்பின் பெரும்பகுதி மையத்தில் சேர்ந்து உள்ளகமாகியது. அதன்மீது பாறைகள் அமைந்து கவசமாயின. மிக லேசான பொருள் மேலே மிதந்து பூமியின் புறணியாகியது.

தொகுத்து அளித்தவர் :— சுவாமி வீரபாகு.

ஆதாரம் :— A Short History of The Universe
By Arthur S. Gregor (New york)

பெரியது கேட்கின்...

1. **மிகப்பெரிய மரம் :**

   கலிபோர்னியா தேசியப் பூங்காவில் உள்ள ரெட் உட் என்ற மரம். அடிமரத்தின் சுற்றளவு 102 அடி, உயரம் 272 அடி.

2. **மிகப்பெரிய மணி :**

   மாஸ்கோவில் உள்ள ஜார்கொலோகால் மணி ஆகும். கனம் 194 டன்கள். 19 அடி உயரம். 23 அடி விட்டம்.

3. **மிகப்பெரிய அணைக்கட்டு :**

   அமெரிக்கநாட்டில் உள்ள நியூகர்னீலியாவில் உள்ளது. கொள் அளவு: 274,026,000 கனகெஜம் (இருபத்துஏழு கோடியே நாற்பது இலட்சத்து இருபத்து ஆறு ஆயிரம் கனகெஜம்.)

4. **மிக உயர்ந்த கட்டிடம் :**

   அமெரிக்காவில் நியூயார்க்கில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டிடம் 1350 அடி உயரம் உள்ளது.

5. **மிகப்பெரிய பூங்கா :**

   ஆப்பிரிக்க நாட்டில் சாம்பியாவில் உள்ள காஃபூ தேசியப் பூங்கா.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

திருவருட்பாத் திரட்டு

(பொழிப்புரையுடன்)

வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ.,

(மலர் 43, இதழ் 12, பக்கம் 618 இன் தொடர்ச்சி.)

6. ஸ்ரீ காசி தாரகப்பத்து

அளிசேர் மலர்க்கூந்த லம்மைவிசா லாக்ஷிபங்கன்
தளிர்சேர் பொழிற்காசிச் சங்கரன்பால் சென்றெனக்குள்
ஒளிசேருந் தாரகத்தை யோதுநா ளென்றென்று
கிளியே யொருவார்த்தை கேட்டுவந்து சொல்லுவையே. 1

(பொ - ரை) வண்டுகளிணைந்த மலர்களணிந்த கூந்தலுடைய விசாலாட்சி அம்மையைப் பாகத்தில் கொண்டவன், தளிர்நிறைந்த பொழில்களுடை காசிச் சங்கரனிடம் சென்று உள்ளொளி சேர்த்திடும் ஒப்பற்ற மொழியை ஓதும் நாள் என்று? என்று கிளியே ஒருவார்த்தைக் கேட்டுவந்து சொல்வாயாக.

(கு - ரை) அளி - வண்டு. உள்ளவாறே கூட்டிப்பொருள் காண்பது சாதாரணம். விசாலாட்சியுடன் அளிசேர்த்து "உயிர்களின் மரணகாலத்தில் ஏற்படும் களைப்பைப் போக்க - தன் மேலாடையால் அவர்களுக்கு வீசி - அருள் செய்கிறுள்என்பதை இவ்வாசிரியரே 'மின்னும் உத்தரீயத்தை வீசும் விசாலாட்சி' (6-7) என்று கூறுவதிலிருந்து" கருணையையும் நினைக்க வழியுண்டு - இது சிறப்பாகும். அளி - கருணை; சங்கரன் - நன்மை இதம் செய்பவன்.

'நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்' (திருவருட்பயன் 1-9)

வெயிலு மிரவியும் போல் விசாலாக்ஷி யம்மைபங்கன்
கயிலாயன் காசியில்வாழ் கண்ணுதல்பால்சென்றெனக்குள்
உயிராகுந் தாரகத்தை யோதுநா ளென்றென்று
மயிலேநீ கேட்டுவந்தென் மனமகிழ விளம்புவையே, 2

(பொ – ரை) கதிரவனும் அவனொளியும்போலப் பிரிப்பின்றிக் கயிலாயன் விசாலாட்சியுடன் காசியில் வாழ்கிறான். அக் கண்ணுதலிடம் சென்று–எனக்குள்ளுயிராகுந் தாரகமந்திரத்தை ஓதும் நாள் எப்போது? என்று மயிலே நீ கேட்டுவந்து என் மனம் மகிழக் கூறுக.

(கு – ரை) இணைபிரியாமைக்கும், இன்றியமையாமைக்கும் வெயிலும் இரவியும் உவமையாயின. தெய்வங்களுக்குச்சூரியன் உவமையாவது காணக்கூடியதே. ‘ உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு ’ – எனக் கூறினர் நக்கீரரும். (திருமுருகு – 1–2 வரி) சூரியனின் கதிர்கள் சமமாக விரிந்தாலும் பக்குவமுடைய தாமரையரும்புகளேமலர்கின்றன. “ வானின் முந்திரவி எதிர்முளரி அலர்வுறுமொன் றலர்வான், முகையாமொன் றென்றுலரு முறையினுமே”(சிவப்பிரகாசம்–17) இறைவன் கதிரவனாய் இருந்தும் நான் பக்குவமடையா மொட்டாக இருக்கிறேனே – என்று தன் செவ்வி நிரம்பா நிலையைக் குறித்ததாகவும் இவ்வுவமை அமைவது நோக்கத்தக்கது.

வேகவதி சூழ்காசி விசாலாக்ஷி யம்மைபங்கன்
நாகமணி கயிலை நாதன்பால் சென்றெனக்குத்
தேகம்விடத் தாரகத்தைச் செப்புநா ளென்றென்று
கோகிலமே கேட்டுவந்து கூவியே கூறுவையே. 3

(பொ ரை) வேகவதியென்னும் கங்கை சூழ்ந்துள்ள காசியில் உமையைப் பங்கிலே கொண்ட அரவமணிந்த கயிலை நாதனிடம் சென்று உடலைவிட உபகாரமாகும் தாரகத்தைச் சொல்லும் நாள் எதுவென்று குயிலே ! நீ கேட்டு வந்து எனை அழைத்துக் கூறிடுக.

(கு – ரை) வேகவதி – கங்கையின் மற்றொரு பெயர். ‘ காசிற் கடுகிவருஞ் செய்தியாலே வேகவதி ’ (திருவிளை– அன்னக்குழி – 27) கோகிலம் – குயில்.

விண்டாங் கருட்காசி விசாலாக்ஷி யம்மைபங்கன்
எண்டோள் முக்கண்ணனு மெந்தைபாற் சென்றெனக்குப்
பண்டாகுந் தாரகத்தைப் பகருநா ளென்றென்று
வண்டேநீ கேட்டுவந்தென் மனமகிழ விளம்புவையே. 4

(பொ – ரை) விண்ணவர்களையும் தாங்கும் அருளுடையான் – விசாலாட்சியைப் பாகங்கொண்டவன் – எட்டுத்

தோளும் முக்கண்ணுமுடையனும் எந்தையிடம் சென்றுஎனக்கு அறிவாகஆகும் தாரகத்தினைப் பகருநாள் எதுவென்றுவண்டே! நீ கேட்டு வந்து என் மனம் மகிழ விளம்பிடுவாய்.

(கு - ரை) விண் ஆகுபெயராய் விண்ணோரைக் குறித்தது எனலாம். எண்தோள் - எண்டோள் வீசினின்றாடும் பிரான் தன்னை (அப்பர்-4-9-2), பண்டாகும் - பண்டா என்றால் அறிவு-பண்டிதன் எனவருவது நோக்குக. தாரகமே உண்மையறிவு எனஓதுவது சிறப்புடையது. பண்டம்-மெய்யுணர்வு; உண்மை. (தமிழ் இலக்கிய அகராதி) பண்டை - கல்வி, ஞானம் (கழகத் தமிழகராதி. கழக வெளியீடு. எண் 1171, '64)

விடமா ரரவணியும் விசாலாக்ஷி யம்மைபங்கன்
தடமார் மதிற்காசிச் சதாசிவன்பால் சென்றெனக்கிங்
குடல்நீங்கத் தாரகத்தை யோதுநா ளென்றென்று
மடநாராய் கேட்டுவந்தென் மனமகிழ விளம்புவையே 5

(பொ - ரை) விடமுடைப் பாம்பணியும் விசாலட்சி பங்கனும் - பெருமை மிகு மதிலுடை காசிச் சதாசிவன் பால் சென்று எனக்கு உடல் நீங்கும்படி தாரகத்தை ஓதும்நாளென்று என்று இளமையுடை நாரையே! கேட்டுவந்து விளம்பிடுக.

(கு - ரை) தடம் - பெருமை. தடவும் கயவும் நளியும் பெருமை (தொல், உரி - 320) மதிற்காசி - வன்னெடும் புரிசை சூழ்ந்த வாரணவாசி எனவரும் (திருவிளை. மூர்த்தி - 2) மடம் - இளமை. மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்னதோர் (திருஞா. 1 - 136 -1) நாரையைத் தூதுவிட்டது 'நாராய் நாராய் செங்கால் நாராய்'-(தனிப்பா. - சக்திமுற்றப் புலவர்)காண்க.

(தொடரும்)

குருமணியின் அருள்மொழி

பகைவனுக்கு அருள்வாய்

ஒருவன் பகைமை பாராட்டுகின்றான் என்றால் அது அவன் அறியாமையால்நிகழ்வது. அந்தப் பகைமைக்கு ஆளாகிறவன் நல்லவனாகவும் அறிவுடையவனாகவும் இருப்பானேயானால் அந்தப்பகைமையைப் பாராட்டியவனிடம் பகைமை கொள்ள மாட்டான்; மாறாக அவனது அறியாமையை நினைந்து இரக்கமே கொள்வான். இந்த உயரிய பண்புள்ளம் நாயன்மார்கள் அனைவரிடத்தும்காணலாம்; சிறப்பாக அப்பர்பெருமானிடத்தில் காண்போம்.

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A., D. U. N., I. U.
பருத்தியூர்

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பாற்சென்று இழிவுபட்டு
நில்லாமை, நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால், ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரைபாதங்கள் சேர்மின்களே. 54

அ. ஒருவர்தம் பாற்சென்று இல்லாமை சொல்லி
இழிவுபட்டு நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல்

(1) "மன்னர், செல்வந்தர் முதலான வசதிபடைத்தவர்க்கத்தினர் ஒருவரிடம் சென்று, உமது வறுமையினைக் கூறி இழிவு மிக்கநிலையில் நிற்கவேண்டிய நிலையினை நீவிர் தவிர்க்கஎண்ணினுல் திரிபுரையாகிய அன்னையின் திருவடிகளைச் சேருங்கள்" என்கிருர்.

(2) வறுமை எய்தியவர்கள், பிறரது உதவியினைப் பெறத் தமது இடம்விட்டுச்சென்று, 'உதவிசெய்யக் கூடியவர்' என்று எண்ணிய ஒருவரிடம் செல்வர், அவரை அவரது இருப்பிடம் தேடி நாடிச் செல்வர். எனவே, 'ஒருவர்தம்பாற் சென்று' என்ருர்.

(3) உணவுக்கு இல்லை, உடைக்கு இல்லை, மகன் கல்விக்கு இல்லை, மகளது திருமணத்திற்கு இல்லை என்றெல்லாம் தமது இல்லாமையினை எடுத்தியம்புவர். தமது வறுமையினை அவர்களுக்குத் தெளிவாக்க இல்லாமைப் பட்டியலைக் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. அதனுல் 'இல்லாமை சொல்லி' என்ருர்.

(4) வறுமை காரணமாகக் குப்பைக் கீரையினைப் பறித்து, உப்பின்றி வேகவைத்து, அதனைப் பிறர் அறியாமல், கதவினைத்

தாழிட்டு உண்டனர் என்ற சங்கத்தமிழ் நூல் கருத்து இல்லாமையினைப் பிறர் அறியச் செய்தல் எவ்வளவு மனவேதனையான நிலை என்பதனைக் காட்டுகிறது. அதனையும் விஞ்சிய நிலையாகும் இல்லாமை சொல்லி நிற்கும் இழிநிலை.

(5) ஈயென இரத்தல் இழிந்தன்று என்பதனுலும் ஆவினுக்கு நீர் என்று கேட்டு இரந்தாலும் நாவினுக்கு அதனைவிட இழிவு இல்லையென வள்ளுவம் கூறுவதனுலும் இரத்தல் இழிவென்பது மிகவும் தெளிவாகிறது. ஆகவே, இல்லாமை கூறி இரந்து நிற்றலை இழிவுபட்டு நிற்கும் நிலையென்ருர்.

(6) உனக்கு என்னகேடு ? ஏன் வேலைசெய்யக்கூடாது ? இப்படி எத்தனைபேர் கிளம்பியிருக்கிருர்கள் ? என்றெல்லாம் பலர் முன் வன்மையாக வினவுவர் வசதி படைத்தோர். இரப்பாரது முன்னேரையும் அவர்தம் செயலையும் தாழ்வாக விமர்சித்து இழிவு படுத்துவர். உதவி கேட்கச் சென்றோர் அச்சொற்களால் தலைகுனிந்து நிற்கவேண்டியிருப்பதால் 'இழிவுபட்டு நில்லாமை' என்ருர்.

(7) வசதிபடைத்தோரைக் காணக் கடைவாயிலில் காத்து நிற்கவேண்டியிருக்கிறது. இரப்பவர் முதியவர் ஆனுலும் சான்ருேர் ஆனுலும் பொருட்படுத்தாது, நிற்கவைத்தேபேசுவர். "வெளியில் நில்லுங்கள் கொடுத்தனுப்புகிறேன்" என்று கூறி நெடுநேரம் நிற்க வைப்பர். இவற்றை யெல்லாம் உள்ளடக்கி 'இழிவுபட்டு நில்லாமை' என்ருர்.

(8) இரத்தல் இழிவு என்று உணர்ந்து அதனைத் தவிர்க்க விரும்புபவர்களையே திரிபுரையிடம் 'சேர்மின்கள்' என்று ஆற்றுப்படுத்த முடியும். இரத்தலையே தொழிலாகக்கொண்டு, அதனை அவமானமாகக் கருதாதோரை அழைத்து ஆற்றுப் படுத்தாது இழிவென்றது 'நெஞ்சில் நினையும்' மக்களே திரிபுரை பாதங்களில் சேருங்கள் என்கிருர்.

(9) "உங்களுக்குப் போதுமென்றமனமிருந்தால், பேராசை இல்லாமல் இருந்தால் இந்தஇனிய வானப்பிரஸ்தவாழ்க்கைக்கு வாருங்கள்" என்று ஆங்கிலக் கவி ஷேக்ஸ்பியர் அழைப்பார்.

**ஆ. நித்தம் நீடுதவம் கல்லாமை கற்ற
கயவர் தம்பால் ஒரு காலத்திலும் செல்லாமை
வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே**

(1) எக்காலத்திலும் நெடிய தவம் புரியப் பயிலாமையினையே கல்வியாகக் கற்ற கயவர்களிடம், ஒருபோதும் தம்

அடியாரைச் செல்லாத நிலையில் வைத்தருளும் திரிபுரசுந்தரியின் திருவடிகளைச் சேர்விர்களாக.

(2) திரிபுர சுந்தரியாகிய அம்பிகை தன் அடியார்களுக்கு வேண்டியன யாவும், அளவுக்கு அதிகமாகவே அளித்துவிடுகிருள். அதனுல் அடியார்கள் இல்லாமை சொல்லிப் பிறரிடம் செல்ல வேண்டிய நிலை ஏற்படுவதில்லை. அதுவும் நீடுதவம் கல்லாமை கற்ற கயவர்களிடம் செல்ல வைப்பதில்லை. அந்த நிலையினைச் செல்லாமை வைத்த நிலை என்ருர்.

(3) இங்கும் நீடு தவம் என்பது அம்பிகை வழிபாடாகிய ஸ்ரீ வித்யா நெறி, மற்றும் அம்பிகையினைப் பற்றிய இடையருச் சிந்தனையுமேயாகும். அந்த நெறியினை விலக்கிப் பிறவற்றினைப் பின்பற்றி இன்னுதன புரியும் இழிதொழிலாரையே நீடுதவம் கல்லாமை கற்ற கயவர் என்ருர்,

'நீடு' என்ற அடைமொழி 'சிறப்புடைய' 'இடையருத' என்ற பொருள்களைத் தந்துநிற்கிறது. "நீள நினைந்து உமை நித்தமும் கைதொழுவேன்" என்ற சுந்தரர் தேவாரச் சொற்ருெடர் இங்கு நினைவுக்கு வரும். அங்கும் நீள, நித்தம், என்ற இரண்டும் வருகின்றன. இங்கும் நித்தம், நீடு, என்ற இரண்டும் வருகின்றன.

(4) தவநெறியினைப் பலகாலம் பயின்று கற்பது போல் அதனைப் பயிலாமையினையும் கல்வியாகவே கற்றகயவர் என்று சாடுகின்ருர். பொய்யுரைத்தலையே சிலர் கைதேர்ந்த கலைபோல் பயின்று, உண்மை எனத் தோன்றுமளவிற்குப் பேசுவர். அது போல் நீடுதவம் கல்லாமையினையே கற்றகயவர் என்று முரண் தொடையாகக் கூறினுர்.

"கரவாகிய கல்வியுளார் கடைசென்று
இரவா வகை மெய்ப்பொருள் ஈகுவையே"

என அருணகிரிநாதரும் தம்மிடம் உள்ளவற்றைக் கரக்கும் (மறைக்கும்) கல்வியாளரைக் காட்டுகிருர்.

(5) அடியார்களுக்கு எல்லாவசதிகளும் இருந்தாலும் சோதனைக் காலங்களில் பிறரிடம் செல்லக்கூடிய சூழ்நிலை உருவாகக் கூடும். அச்சூழ்நிலையிலும் அவளை நம்பும் மனவுறுதியும் அளித்து, அவளே அச் சூழ்நிலையிலிருந்து மீளுமாறு அருள் செய்து விடுவாள். எனவே அவர்கள் எப்போதும் கயவர்

களிடத்தில் செல்லவேண்டியதில்லை யாகையால் 'செல்லாமை வைத்த திரிபுரை' என்றார்.

(6) முப்பெரும் சோழப் பேரரசர்களிடம் இராஜகுருவாகத் திகழ்ந்த ஒட்டக்கூத்தர் சிறந்த தேவி உபாஸகர். அவர் வேறு எவரிடமும் எக்காலத்திலும் சென்று நின்றதில்லை. தன்னை வழி பட்ட கூத்தரை அரசபோகத்துடன் கூடிய வாழ்வில் அமர்த்தி யிருந்தாள் அம்பிகை.

(7) அம்பிகையின் அருள் பெற்ற மகாகவி என்பதனை யுணர்ந்து 'அட்சரலட்சம்' கொடுத்துச் சிறப்பித்த போஜமன்னனைத் தவிர வேறு எவரிடத்திலும் எக்காலத்திலும் காளிதாசன் சென்றதில்லை. இவர்கள் வரலாறுகள் செல்லாமை வைத்த சிறப்பினைக் காட்டுவனவாகும்.

(8) ஸ்ரீசக்ரத்தின் முதல் ஆவரண தேவதையாகிய திரிபுரை எல்லா சித்திகளும் அருள வல்லவள். எனவே அவள் அடியவர் பிறரிடம் செல்லத் தேவையில்லை என்பதனை உரையாசிரியர் திரு. சண்முகநாதன் அவர்கள் விளக்குகிறார்.

(9) தானும், தன்னைப் போன்ற அடியார்களும் ஒரு காலத் திலும் கயவர்தம்பால் செல்லாமை வைத்த அம்பிகையிடம் ஏனையோரையும் ஆற்றுப்படுத்துகின்றார் அபிராமி பட்டர். "உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே" எனப்பின்னும் ஆற்றுப்படுத்துவார்.

(10) 'நிர்-ஆச்ரயா' என்கிறது சகஸ்ரநாமம். அதாவது, அம்பிகை யாரையும் சார்ந்திருப்பதில்லை. ஆனால் அனைத்துலகும் அவளைச் சார்வாகக்கொண்டிருக்கின்றன. அடியார் இறைவன் திருவடிகளைச் சார்ந்திருத்தலை அல்லது சேர்ந்திருத்தலை "ஆச்ர யித்தல்" என்று வட நூலார் கூறுவர், அடிச்சேர்தல் அல்லது சார்தல் எனத் தமிழில் ஆளுவர், "தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார், மலர்மிசையேகினான் மாணடி சேர்ந்தார்" என்றெல்லாம் கூறுவார் வள்ளுவர். 'அப்பாலும் அடிச்சார்ந் தார்' என்பார் சுந்தரர். அதேவழியில் அபிராமி பட்டரும் சேர்மின்களே என்றார்.

(11) கயவர் தம்பால் செல்லாமை வைத்தது என்பது திரி புரையின் இயல்பு என்றும் கொள்ளலாம். அதாவது எக்காலத் திலும் அம்பிகை கயவர்களிடம் செல்வதில்லை என்பதாகும்.

கொடியவர்களுக்குத் தூரத்தில் இருப்பவள் என்ற பொருளில் 'துஷ்டதூரா' என்று சகஸ்ரநாமம் புகழுகின்றது. அபிராமி பட்டரும் 'வஞ்சகர் நெஞ்சு அடையாள்' என்பார்.

(12) பிரபுடதேவராயன் சபையில் அருணகிரி நாதருடன் போட்டியிட்ட சம்பந்தாண்டான் அன்னையினை மன்னன் காண அழைத்தான். ஆனால் வஞ்சகநெஞ்சு பெற்றிருந்த சம்பந்தாண்டான் தன்னைத் 'தேவி உபாஸகன்' என்று சாற்றிக்கொண்ட போதிலும் அவன்பொருட்டு அம்பிகை செல்லவில்லை. கயவர் தம்பால் செல்லாமை வைத்து விட்டாள்.

(13) "தம்மையே புகழ்ந்து இச்சை பேசினுஞ்
சார்கினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலும் ஆம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுறவில்லையே"

என்ற திருப்புகலூர்ப் பதிகத்தில் சுந்தரர் ஈயாத புல்லரைப் புகழாது இறைவனைப் பாடப் பணிக்கிறார். அவன்தரும் ஊணும் உடையும் சிவலோகமும் ஆகிய பேறுகளையும் குறிப்பிட்டார். செங்கல்லைப் பொன்னாக்கிய வரலாறு பொதிந்த இப்பதிகத்தின் எல்லாப் பாடல்களிலும் இறைவன் மட்டுமே செல்லாமை வைக்க வல்லவன் என்பதைக் காட்டுகிறார்.

வறுமை நீங்கி வசதிகள் பெறுதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும். (தொடரும்)

குருமணியின் அருள்மொழி

சமயத்துறையில் சகவாழ்வு

எத்துணைப் பொருள்வளமும், படைபலமும் இருந்தாலும் யாரும் யாரையும் அடிமைப்படுத்த இயலாது என்பதை உளங்கொண்டு. அதுபோன்றே எந்தச் சமயமும் பிறசமயத்தை அழித்துவிடமுடியாது என்பதையும்எண்ணி எல்லாச் சமயங்களும் ஒன்றாய் இணைந்து செயற்பட்டால் நலம் விளையும் – நன்மை பெருகும்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவாரப்பாடல் பெற்ற சிவத்தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்துவருகின்றன. இம்மாதம் 15—11—84 வியாழக்கிழமையன்று நெய்வெண்ணை என வழங்கும் திருநெல்வெண்ணெய்த் தலத்தில் வழிபாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. அருள்மிகு நீலமலர்க்கண்ணி உடனுகிய அருள்மிகு வெண்ணெயப்பருக்கும் மற்றும் மூர்த்தி களுக்கும் சிறப்புவழிபாடுகள் நிகழ்வுற்றன. தலத்திருப்பதிகம் பாராயணம் செய்யப்பெற்றது. ' திருநெல்வெண்ணெய்த் திருப் பதிகம் ' என்றநூல் வெளியிடப்பெற்றது தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம்.ஏ., விரிவுரையாற்றினர். அன்பர்பலர் வழிபாட்டிற் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கிலமாத முதல் ஞாயிறன்றும் காலை சரியாகப் பத்துமணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வணங்கி வழிபட்டு அருளுபதேசம்பெறும் பிரார்த்தனைக்கூட்டம் நிகழ்ந்துவருகிறது. 2—12—84 அன்று 42 ஆம் அருளுபதேசம் நிகழ்வுற்றது.

முதலில் வழிபாடும் கூட்டுப் பிரார்த்தனையும் நிகழ்ந்தன. அடுத்துத் தருமையாதீனம் தேவஸ்தானம் கண்காணிப்பாளர் திரு டி. என். அருணசலம், B. A. B. L., அவர்கள் ' திருவாசகத் தில் திருப்பொற்சுண்ணம் ' என்ற பகுதியை விளக்கினர்கள். இப்பகுதியின் அமைப்பும் அழகும்பற்றி விரித்துக்கூறிச் சில பாடல்களை விளக்கினர்கள். " வையக மெல்லாம் " என்ற பாடலின் நுட்பத்தினையும் " ஏய்ந்த பொற்சுண்ணம் " என்ற தொடரின் அருமைப்பாட்டையும் குறிப்பிட்டார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாகத் திருநாவுக்கரசர்புராணத்தைநிறைவுசெய்தார்கள்.

சமயதத்துவச் செறிவும் திருத்தலப் பெருமையும் திருப்பதிக நெறியும் உபதேசத்தில் இழையோடியது; கேட்போர்க்கு இன்பம் நல்குமாறுகுருமணிகளின் உபதேசம் அமைந்திருந்தது. நாவுக்கரசர் திருவாலங்காட்டைத் தரிசித்தபோது காரைக் காலம்மை நினைவால் கயிலாய யாத்திரை செய்யும் உணர்வு தோன்றியிருக்க வேண்டும் என்றும் ஞானசம்பந்தர் காளத்தி மலையை வழிபட்டபோது அது கைலையின் சிதறல் ஆகையால் கயிலைத் தரிசன உணர்வு கொண்டார் என்றும் குறிப்பிட்டமை சமய நோக்குடன் கூடிய ஆய்வுக்கருத்தாக மனமகிழ்வைத்தந் தது. திருவாரூர், கச்சி, மதுரைத் திருப்பதிகங்களைக் கொண்டு 'எல்லாருக்கும் முன்னேதோன்றி முளைத்தபெருமான், ஒருவன் என்னும் ஒருவனும் சிவனே' என விளக்கியமை நுட்பமான ஆய்வாக அமைந்திருந்தது.

மயிலாடுதுறை அன்பர்களும் பக்தர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். அடுத்து 6—1—85 அன்று 43 ஆம் அருளுபதேசம் நிகழ இருக்கிறது. அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறுக.

கடைமுழுக்குவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான மயிலாடுதுறை வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவர சுவாமி திருக்கோயிலில் கடைமுழுக்கை நிறைவாகக்கொண்டு பத்துநாட்கள் துலா உற்சவம் நடைபெற்றது. நாடோறும் பஞ்ச மூர்த்திகள் உலாக்காட்சியும் 15—11—84 கடைமுழுக்கன்று தீர்த்தம் கொடுத்தருளலும் சிறப்பாக நிகழ்வுற்றன. 12—11—84 திருக்கல்யாணத்திருநாளன்றும் கடைமுழுக்கன்றும் அன்பர்கள் வழிபட்டும் தீர்த்தமாடியும் திருவருள்பெற்றனர்.

நாயன்மார் குருபூஜைத் திருநாட்கள்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் ஐப்பசிப் பூசநாளில் (14—11—84) சத்தி நாயனர், கார்த்திகை அஸ்தநாளில் (19—11—84) ஆனய நாயனர், மூலநாளில் (25—11—84) மூர்க்க நாயனர், பூராட நாளில் (26—11—84) சிறப்புலிநாயனர் குருபூசைத் திருநாட்கள் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு அருச்சனை வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன. வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., புராணம் வாசித்து வரலாறு கூறினர். ஆதீனத்தேவாரப் பாடசாலை, ஆகமபாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் அன்பர்களும் கலந்துகொண்டுபயன்பெற்றனர்.

6-ம் பக்கத் தொடர்ச்சி)

" அஞ்சியாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைந்ின்றி யூரரை நீ"

என்னும் தேவாரத்தொடர் கொண்டு விளக்கினர்கள். கீழ்நிலையில் உள்ளோர் அச்சம் காரணமாக இறைவனை வழிபடுவர்; மேனிலையில் உள்ளோர் அன்புகாரணமாக வழிபடுவர்'' ' அச்சமே கீழ்களது ஆசாரம் ' என்பர். ' அச்சக் காரணமாகத் தான் இறைவழிபாடே தோன்றியது ' என்பர் சில ஆய்வாளர் மகரிஷிகள், முனிவர்கள் அன்பு காரணமாக வழிபட்டனர். இங்ஙனம் பல அரிய கருத்துக்களை இனிய முறையில் எளிமைப் படுத்தி விளக்கினர்கள். திருநனிபள்ளித் தலச்சிறப்பாகத் திருஞானசம்பந்தரின் தாயார் பிறந்த தலம் எனக் குறிப்பும் அளித்தார்கள். குருமணிகள் தலச்சிறப்புக்களை அருளிய போது ஒவ்வொரு தலத்தையும் வாழ்வில் ஒருமுறையேனும் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. திருநாவுக்கரசர் காவிரியின் தென்கரைத் தலங்களாகிய திருச்செம்பொன்பள்ளி, மயிலாடுதுறை, ஆற்றிடைக்குறையிலுள்ள தலமாகிய திருத்துருத்தி (குற்றலம்) முதலிய தலங்களையும் திருவேள்விக்குடி, எதிர்கொள்பாடி, திருக்கோடிக்கா முதலியவடகரைத் தலங்களையும் வழிபட்டார்.

அப்பர் திருச்சத்திமுற்றம் அடைகிருர்; பெருமானை வழிபடுகிருர். பழைய உணர்வு மீண்டும் தோன்றுகிறது! ஆம்; சமண மதத்திற்குச்சென்றமையால் ஏற்பட்ட அருவருப்பு. பெருமானை வேண்டுகிருர்... "கூற்றம் குமைப்பதன் முன் பூவார்ந்தசேவடி என்மேல் பொறித்து வைத்தருள்க" என்று. சிவக்கொழுந்தீசர் "நல்லூருக்குவருக" என்று அருளினர்.

அப்பர், திருநல்லூரை அடைந்தார். "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றேம்" என்று அருளி அவர் சென்னிமிசைப் பாதமலர் சூட்டினர் சிவபெருமான். நாவுக்கரசர் "நினைந்துருகும் அடியாரை" எனத்தொடங்கும் திருத்தாண்டகம்பாடிஒவ்வொரு திருப்பாட்டின் இறுதியிலும் "திருவடியென் தலைமேல்வைத்தார்! நல்லூர் எம்பெருமானர் நல்லவரே" என்றுபாடினர். அகச்சான்ருகவிளங்கும் இப்பகுதியை நுட்பமாகச் சுட்டியருளினர்கள்.

திருநல்லூரிலிருந்து திருக்கருகாவூர், ஆவூர்ப்பசுபதீச்சரம் திருப்பாலைத்துறை முதலியதலங்களைத்தரிசிக்கிருர். திருப்பாலைத் துறைப் பதிகப் பாடலை உணர்வுதோய்ந்து அருளுகின்ருர்கள்.

" விண்ணினூர் பணிந் தேத்த வியப்புறும்
மண்ணினூர் மறவாது சிவாய என்று
எண்ணினூ ரவர்க் கிடமா எழில்வானகம்
பண்ணினூ ரவர் பாலைத் துறையரே "

வேதத்தில் இடையில் – ஸ்ரீருத்ரத்தின் நடுவே பஞ்சாட்சரம் அமைந்திருப்பதுபோலவே தேவாரத் திருமுறைகளின் நடுவே பஞ்சாட்சரம் அமையப்பெற்ற இப்பாடல் சிறப்பை நமக்குப் புலப்படுத்தினூர்கள்.

அப்பர் திருப்பழனம் பணிந்து திங்களூர் வருகின்றூர் திங்களூரில் பல தருமங்களையும் திருநாவுக்கரசர் பெயரால் அமைத்த அப்பூதியடிகள் பற்றிக் கேட்டு அவர் திருமனை எய்தினூர். நும்பெயர் எழுதாமல் வேறுஒரு பேர் எழுதக்காரணம் என்ன? எனக்கேட்டார். அப்பூதியார் வெகுண்டார்; திருநாவுக்கரசர் பெருமைகூறினூர் அப்பூதியார். பின்னர் வந்தவர் திருநாவுக்கரசரே என அறிந்து தம் இல்லில் திருவமுது செய்ய வேண்டினூர்; அப்பரும் ஒப்பினூர். வாழையிலை அரியச்சென்ற மூத்த திருநாவுக்கரசு விடம் தீண்டி இறக்க – அதனைமறைத்து அப்பரை அமுதுசெய்ய வேண்டினூர், அப்பூதி.

திருநாவுக்கரசர், மூத்த திருநாவுக்கரசு விடம் தீண்டி இறந்தமை அறிந்தார். பிள்ளையை இழந்தவர்க்குத் தடுமாற்றம் தோன்றவில்லை; அருளால் உணர்ந்த அப்பர் உள்ளத்தில் தடுமாற்றம்எய்தினூர்; திருக்கோயிலுக்குமூத்த திருநாவுக்கரசைக் கொணர்வித்து, 'ஒன்றுகொலாம்' என்ற பதிகம்பாடி உயிர்பெற்றெழச்செய்தார். அப்பூதியாரும் அப்பரும் திருப்பழனப் பெருமானைப் பணிந்தனர்.

திருப்பழனப் பதிகத்தில் "இறைவன் திருவடிகள் அப்பூதி அடிகளின் முடிமேலான" என்று அருளினூர் அப்பர். மேலும் அப்பதிகத்தில் 'மண்பொருந்தி' என்ற பாடலில் சிவபூசை எடுத்தால் உயிர்நீங்கும் வரை விடாமல்செய்யவேண்டும் என்ற குறிப்பை அருளிச்செய்கிறூர். அதனூலேயே சிவபூசைநிறைவில் இப்பாடலைப் பாராயணம் செய்வது பழக்கம் என்ற குறிப்பையும் குருமணிகள் அருளினூர்கள். பயனுள்ள இக்குறிப்புக்கள் அனைவரும் அறியவேண்டிய நுட்பமானமை.

நாவுக்கரசர்நல்லூரைப்பணிந்துபழையாறைஅடைகின்றூர். திருவலஞ்சுழி, திருக்குடமூக்கு, திருச்சேறை, திருக்குடவாயில், திருநறையூர், திருவாஞ்சியம், திருப்பெருவேளூர், திருவிளமர் முதலியதிருப்பதிகளைத்தரிசிக்கின்றூர் திருவாரூரை அடைகின்றூர்.

குருமணிகள் திருவாரூரின் பெருமைகளைச் சிறப்பாக விளக்கியருளினர்கள். " திருவாரூர் மூலாதாரத்தலம் என்பர். திருவாரூரில் உயிர்களின் பக்குவநிலை பற்றியும் சிவனின் பெருமையும் சீவனின் சிறுமையும் பற்றியும் உணரமுடிகிறது. "

ஞானசம்பந்தர் " எந்தைதான் என்னை ஏன்றுகொளும் கொலோ " என்று இத்தலத்தில் பாடினர். சுந்தரர் " எந்தை இருப்பதும் ஆரூர்; அவர்எம்மையும் ஆள்வரோ கேளீர்" என்று அருளினர். நாவுக்கரசரும் ஆரூரில் இதேநிலையில் பாடியருள்கின்றார். " புலம்பலம்பாவரு தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் ………நமக்கு உண்டு கொலோ" என்று!-இவ்வாறு சிறப்பான ஒப்பீடு செய்தருளினர்கள்.

" பாடிளம் பூதத்தினனும் " எனத்தொடங்கும் பதிகத்தின் பத்தாம் பாடலில் " பொய்அஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ் புரிந்தவர்களுக்கு இறைவன் அருள்செய்வான் " என்று பாடிய அப்பர் " ஐயஞ்சின் அப்புறத்தான் இறைவன் " என்கிறார். குருநாதர் ' ஐயைந்தின் அப்புறத்தான் ' என்பது 25 மகேசுவர மூர்த்தங்களுக்கும் அப்பாற்பட்டவன் என்னும் சரியான பொருளை நிறுவியருளினர்கள்.

திருவாரூர் அரநெறி ஆலயத்தில்நமிநந்தியடிகளின் தொண்டினை அப்பர் நினைவு கூர்கிறார். ' அடித்தொண்டன் நம்பிநந்தி நீரால் விளக்கிட்டமை இந்த நீணிடு அறியுமன்றே ' என்ற தொடர் திருவிருத்தத் திருப்பதிகத்தில் உள்ளது எனப்பதிகத்தில் அமைந்த வரலாற்றுக் குறிப்பைப் புலப்படுத்தினர்கள்.

திருவாரூர் மிகத் தொன்மையான தலம்; மூலாதாரத்தலம் என்பதை அப்பர் சுவாமிகளின் வாக்குகொண்டு அற்புதமாக விளக்கினர்கள். "ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ" என்ற பதிகம் இதற்கு ஆதாரமாய் அமைவது. ஒருவனாக இருந்த காலத்தின் பின்னரே பலதெய்வம் என்ற நிலை ஏற்பட்டது. சிவபெருமான் ஒருவனே ஒருவனாய் உலகேத்த நின்றான் " என்னும் கருத்தைப் பல சான்றுகளோடு விளக்கினர்கள். திருவாரூர்ப் பெருமான் அங்குத் திருக்கோயில் கொண்டநாள் புராணம் வரலாறுகட்கு முற்பட்டதோ என அப்பர் அருளிச்செய்கிறார். அப்பதிகத்தில் புராண நிகழ்வுகள் பலவற்றைக் குறிக்கிறார் என்ற ஆய்வுக் கருத்தை ஆதாரத்தோடு நிறுவியருளினர்கள்.

திருவாரூரிலிருந்த காலத்தில் வலிவலம், கீழ்வேளூர், திருக்கன்றாப்பூர் முதலிய தலங்களைத் தரிசித்தார் அப்பர். மீண்டும் ஆரூர் சேர்ந்தார். திருவாதிரையின் போது ஆரூர்ப்பெருமானை அடியார் குழாத்தோடு சென்று வணங்கினார். திருப்புகலூர்ப் பெருமானைத்தரிசிக்க விரும்பிச்சென்றார். சீகாழியிலிருந்து புறப்பட்டு ஞானசம்பந்தர் முருகநாயனார் திருமடத்தில் எழுந்தருளியிருந்தார். அவர் நாவுக்கரசர் வரவுபற்றிக் கேள்வியுற்று எதிர்நோக்கியிருந்தார். இரண்டாம்முறையாக அப்பரும் சம்பந்தரும் சந்தித்தனர். இருவரும்சந்தித்ததை நிலவின்கடல் ஒன்றாக அணைந்தன போல் எனச்சேக்கிழார் விளக்கினார். ஞானசம்பந்தரின்வேண்டுகோளின்படி 'முத்து விதானம்' எனத்தொடங்கும் பதிகத்தால் ஆதிரைநாட் சிறப்புக்களை எடுத்தோதினார் திருநாவுக்கரசர் திருப்புகலூரில் தங்கியிருந்து செங்காட்டங்குடி திருநள்ளாறு, சாத்தமங்கை, திருமருகல் முதலிய தலங்களை வழிபட்டார்.

ஞானசம்பந்தர் திருவாரூர்ப் பெருமானைத் தரிசித்துத் திருப்புகலூர் மீண்டார். திருப்புகலூர் முருகநாயனார் திருமடத்தில் சிறுத்தொண்டர், நீலநக்கர் ஆகிய அடியார்களுடன் அப்பரும், ஞானசம்பந்தரும் தங்கியிருந்தனர்; ஒன்றுபட்ட மனத்துடன் யாவரும்கூடியிருந்தனர்; சிவானந்தப் பெரும்பயன்பெற்றனர்.

அடியார்களிடம் விடை கொண்டு அப்பரும் சம்பந்தரும் அம்பர்ப்பதியை வழிபட்டுக்கடவூர்போந்து குங்குலியக்கலயர் திருமடத்தில் எழுந்தருளியிருந்தனர் கடவூர், கடவூர்மயானம் தரித்தனர். திருஆக்கூர்த் தான் தோன்றி மாடத்தைத் தொழுது பதிகம்பாடி வீழிமிழலை வந்தடைத்தனர்.

அடியார்களும் அன்பர்களும் அப்பரும் சம்பந்தரும் வீழிமிழலை வருதலையறிந்து வரவேற்றனர். அவர்கள் வீழிமிழலையில் வழிபட்டிருக்கும் காலத்துப்பருவமழை தவறியமையால்பஞ்சம் ஏற்பட்டது; நாட்டில் பசிமிகுந்தது. அடியார்கள் உணவின்றி வருந்துதல்கண்டு வருந்துகின்றனர். திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர்ஆகிய இருவர் கனவிலும் பெருமான் தோன்றினார்; நாளைமுதல்அடியார்கட்குக் கொடுக்கும் பொருட்டு உமக்குப் படிகாசுஅளிப்போம் என அருளினார்.

அப்பரும் சம்பந்தரும் இறைவனைக் காலந்தோறும் வழிபட்டனர். இறைவன் திருக்கோயிலின் கிழக்குப் பீடத்தில் ஞானசம்பந்தருக்குப் படிக்காசும் மேற்குப் பீடத்தில் நாவுக்கரசருக்குப் படிக்காசும் வைத்தருளினார். சம்பந்தரும் அப்பரும் காசு பெற்று இரண்டுகாலங்களிலும் அடியார்க்குத் தனித்தனி அமுது படைத்தனர்.

திருஞானசம்பந்தர் திருமடத்தில் அமுதுபடைக்கச் சிறிது காலம் தாழ்ந்தது. அதற்குக் காரணம் வாசிக் (வட்டம்) காசு அவர்க்கு அளிக்கப்பட்டதுவே. குருமணிகள் இந்தப்பகுதியைச் சேக்கிழார் வாக்கினையொட்டி இனிமையாக விளக்கம் அருளினர்கள்.

ஞானசம்பந்தர், பெருமானுக்குக் குமாரர் ஆவார். ஆதலின் வாசிக் காசு பெற்றார் கைத்தொண்டுபுரியும் பான்மையால் அப்பர் வாசியில்லாக்காசுபெற்றார். பலகாலம் இருவர் திருமடங்களிலும் அடியார்க்கு அமுதுபடி சிறப்பாக நடைபெற்றது; இறையருளால் மழைபெய்தது; வளம் சுரந்தது.

அங்கிருந்து இருவரும் புறப்பட்டுத் திருவாஞ்சியம் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருமறைக்காடு அடைந்தனர். பெருமான் கோயிலை நண்ணினர்; திருவாயிலை அடைந்தனர். வாயில் அடைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்தோரை இதுபற்றி வினவினர். அவர்கள் "முன்னொருகாலத்தில் வேதங்கள் பெருமானைப் வழிபட்டுத் திருவாயிலைக் காப்பிட்டுச் சென்றன; அந்நாளிலிருத்து இந்நாள் வரை கதவு காப்பிட்டபடியே உளது; பக்கத்தில் வேறொருவாயிலை அமைத்து வழிபடுகின்றோம்" என்றனர். அப்போது ஞானசம்பந்தர் 'நாம் நேர் வழியில் சென்று இறைவனை வழிபட வேண்டும்; திருக்காப்பு நீங்கும்படி பதிகம் பாடுக' என வேண்டினர். அப்பரும் 'பண்ணினேர் மொழியாள்' எனத் தொடங்கிக் கதவு திறக்கப் பாடினர்; கதவுதிறக்கத் தாமதம் ஆவதுகண்டு கடைக்காப்பில் 'இரக்கம் ஒன்றிலீர்' என்று பாடி நிறைத்தார். இறையருளால் கதவு திறந்தது. இருவரும் நிலத்தில் விழுந்து வணங்கி உட்சென்று பணிந்து மீண்டனர்.

அப்பர் அப்போது 'இக்கதவம் திறக்கவும் மூடவும் இருக்க வேண்டும்' என விரும்பினர். ஞானசம்பந்தர் அவர் விருப்பப்படி 'சதுரம்மறை' எனத் தொடங்கிப் பாடினர். முதற்பாடல் பாடிய உடனேயேதிருக்காப்பிட்டது. அடியார்கள்மகிழ்ந்தனர். அன்றுமுதல் அக்கதவு திறக்கவும் அடைக்கவுமாக உள்ளது.

நாவுக்கரசர், அன்றிரவு, கதவுதிறக்கத்தாம் அரிதின்முயன்று பாடிய பெற்றியையும், சம்பந்தர் அடைக்கப் பாடிய எளிமையையும்எண்ணினர்; 'பெருமான் திருக்குறிப்பு அறியாது அயர்ந்தேன்' என வருந்தினர். அவர் கனவில் பெருமான் தோன்றி 'நாம்திருவாய்மூரில்இருப்போம்; அங்குஎம்மைத்தொடர்ந்துவா'

எனப் பணித்தார். திருநாவுக்கரசர், கனவில் தோன்றிய பெருமானைத் தொடர்ந்து எழுந்து சென்றார். திருவாய்மூர்க் கோயிலை அடைந்தார்.

ஞானசம்பந்தர், திருவாய்மூர்க்கு அப்பர் செல்கின்றார் என அறிந்து அவரைத் தொடர்ந்தார்; அங்குச்சேர்ந்தார். பெருமான் நாவுக்கரசருக்குக் காட்சிதந்திலர். "திறக்கப்பாடிய என்னினும் செந்தமிழ் உறைப்புப் பாடி அடைப்பித்தார் உந்நின்றார்" அவருக்கு எப்படி ஒளிக்கலாம் என நாவுக்கரசர் பாட ஞான சம்பந்தருக்குப் பெருமான் காட்சிதந்தருளினார். ஞானசம்பந்தர் அக்காட்சியைக் காட்ட நாவுக்கரசர் கண்டு பணிந்தார். 'பாட அடியார் பரவக் கண்டேன்' என்று தொடங்கிப் பதிகம் பாடினார். சிலநாள் அங்குத் தங்கி வழிபட்டுத் திருமறைக்காடு அடைந்தனர்.

இங்ஙனம் குருமணிகள் நாவுக்கரசர் வரலாற்றைத் தல வழி பாட்டு வரிசையில் அற்புதமாக விளக்கி இடையிடையே குறிப்புக்கள் பலவற்றை உபதேசித்தார்கள் திருவாமூர்ப் பெருமான் செயலைக் காணும் உபகாரம், காட்டும் உபகாரம் என்னும் சைவசித்தாந்த நெறிகொண்டு புலப்படுத்தினார்கள். அங்கப்பிரதட்சணம், சத்யாக்கிரகம் முதலிய நெறிகள் அப்பர் காட்டிய நெறிகள் – அப்பர் வாழ்ந்து காட்டிய அருளாளர்; இவ்வாறு பல நுட்பமானகருத்துக்களை உணர்த்தியருளினார்கள். உயர்ந்த கருத்துக்களை எளிமையாக விளக்கினார்கள். மணி 12–15 ஆயிற்று. மங்கலவாழ்த்துடன் உபதேசம் நிறைந்தது.

கனிச்சாறு பருகினோம்; களிப்போடு இல்லம் திரும்பினோம்!

வாழ்க குருமணிகள்!

நாவலரின் நற்சிந்தனைகள்

வெறுங்கண்ணாடியில் யாதொரு உருவமும் பதிவதில்லை. தகுந்த வஸ்துக்களை அக்கண்ணாடியின்மேல் பூசியபின் படங்களை எழுதலாம். அதுபோல் பக்தியாகிய வஸ்துவை மானிட இருதயத்தின்மீதுதடவினால் அங்கு ஈசுவரனுடைய உருவத்தைப் பதியச்செய்யலாம்.

—யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்.

(சந்மார்க்கபோதினி)

தருமையாதீனம்

அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சிநிறுவனம்

இயக்குநர் நியமனம் – ஆய்வுப்பணி தொடங்கியது

தருமையாதீனம் அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்திற்கு இயக்குநராக (Directer) டாக்டர் திரு. ஏ. வி. ஜயசந்திரன், எம். ஏ., பி. எல்., பி. எச்டி. அவர்களை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நியமனம் செய்துள்ளார்கள். டாக்டர் ஜயசந்திரன் அவர்கள் மதுரை, திருப்பதி அருங்கலைக் காட்சி நிலையங்களை நிறுவியவர். கலைத்துறையிலும் சமயத்துறையிலும் டாக்டர் அவர்கள் பல கருத்தரங்கம் ஆய்வு அரங்கங்களிலேபங்குபெற்றுச் சிறப்புரைகள் ஆற்றியுள்ளவர். அண்மையில் அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கில் தருமை ஆதீனம் இவருக்கு "**திருக்கோயில் கலாநிதி**" என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

நவம்பர் 28–ம் தேதியிலிருந்து ஆராய்ச்சி நிறுவன அலுவலகம்செயற்படத்தொடங்கியுள்ளது. சைவசித்தாந்தக்கலைச்சொல் அகராதி, * சைவசித்தாந்த நூல்கள் ஆய்வு அடங்கல், ‡ சைவ சித்தாந்தக் கலைக்களஞ்சியம், † ஆகியவை வெளியிடத்திட்டம் இடம் பெற்றுள்ளது.

திட்டத்தின் முதற்கட்டமாக நிறுவனம் சைவசித்தாந்தக் கலைச்சொல் அகராதிப் பணியைத் தொடங்கியுள்ளது. டிசம்பர் 8–ம்தேதி தருமைப் பல்கலைக் கல்லூரியில் முதற்கூட்டம் நடைபெற்றது. இயக்குநர் தலைமையில் மகாவித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர், திருவாளர்கள் கா. வெள்ளைவாரணனார், கு. அருணசலக் கவுண்டர், டாக்டர் இரா. செல்வக்கணபதி, வேங்கடராமையா, கா. ம. கண்ணப்பன், மு. சிவச்சந்திரன், தா. ம. வெள்ளைவாரணன், திருமதிகள் ப. நீலா, மீராகிருஷ்ணமூர்த்தி முதலியவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சைவசித்தாந்தக் கலைச்சொல் அகராதி தயாரிக்க அவரவர்கட்கும் மேற்கொள்ளவேண்டிய பணிகள் ஒப்படைக்கப்பட்டன.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், சைவம் மறுமலர்ச்சியுறவும், சைவ சித்தாந்தத்தைப் பாரெங்கும் பரப்பி மக்கள் பயன்பெறவும் திருவுளம் கொண்டுள்ளது சைவ உலகிற்கு ஒரு பெரும் பேறாகும்.

---

* (Dictionary) ‡ (Bibliography) † (Encyclopaedia)

பேராசிரியர்

இரா. செல்வக்கணபதிக்கு டாக்டர் பட்டம்

தருமை ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் புலவர் இரா. செல்வக்கணபதிக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் 'டாக்டர்' பட்டம் வழங்கியுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் கடந்த 450 ஆண்டுகளாகச் செந்தமிழும், சிவநெறியும் வளர்த்து வரும் புகழ்மிக்க தருமபுர ஆதீனத்தின் தமிழ்வளர்ச்சிப் பணி பற்றி மேற்கொண்ட ஆய்விற்காகவே போராசிரியர் இரா. செல்வக்கணபதிக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் இந்தப் பட்டத்தை வழங்கியிருக்கிறது.

டாக்டர் பட்டம் பெற்றுள்ள பேராசிரியர் இரா. செல்வக்கணபதி தருமை ஆதீனப்பல்கலைக் கல்லூரியின் முன்னாள் மாணவர். 1970 முதல் இக்கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். தமிழ் வித்துவான் தேர்வில் மாநில முதன்மை பெற்றுத் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் 1,000 ரூபாய்ப் பரிசினைப் பெற்றவர். நாடறிந்த சமய, இலக்கிய மேடைப்பேச்சாளர். 'செந்தமிழ்வாரிதி' 'சைவத்தமிழ்மணி' முதலிய பட்டங்களைப் பெற்றுள்ளார். தற்போது பாரதிதாசன் பல்கலைக்கழகப் 'பேரவை' உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார். இவர் எழுதிய 'தமிழ் வளர்க்கும் தருமபுரம்' என்ற நூல் மதுரையில் ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டில் நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களால் வெளியிடப்பெற்று, பன்னாட்டுத்தமிழ் அறிஞர்களுக்கும் வழங்கப்பெற்றது.

சைவசமயம்

டாக்டர். திரு. தா. ஐ. ஏசுதாஸ், எம். ஏ., எம். லிட்., பி. எச்டி.,
முன்னாள் தத்துவப் பேராசிரியர், அண்ணாமலைநகர்.

சைவசித்தாந்தம்பற்றி எவரும்புரிந்துகொள்ளும்வகையில் எளிய நடையில் இனிய முறையில் எழுதப்பட்டநூல், அடக்க விலையில் வழங்கப்படுகிறது. **விலை ரூ. 4—00.**

ஞானசம்பந்தம் பதிப்பகம், ஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின்
தருமையாதீனம், குருபூஜை மலராக
மயிலாடுதுறை 609 001, வழங்கப்படுகிறது.

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(இரக்தாக்ஷிஹு மார்கழிமீ 1உ முதல் 29உ முடிய)
(16—12—1984 முதல் 13—1—1985 முடிய)

ஸ்ரீ இரக்தாக்ஷிஹு கார்த்திகைமீ 30உ ஸ்திரவாரம் உத்திர நக்ஷத்திரம் பாலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 33 நாழிகை 12 வினடிக்கு மிதுன லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுர்ராசி சங்கிரமணமாக தேவதின விடியற்காலப்பொழுதாகிய மார்கழிமாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். தானியாதிபதி சனிபகவான் ஆவார். மறுதினம் பானுவாரம் மார்கழி முதல்தேதியானால் அன்று தனுர் பூஜாரம்பம். எல்லோரும் மாதம் பூராவும் அருணோதயம் முன்பு எழுந்து மார்கழிநீராடித் தேவாலயம் சென்று உஷாக்காலத்தில் இறைவனைத் தரிசித்தால் இலட்சுமிகடாக்ஷம் உண்டாகும். எல்லாபாக்கியங்களும் பெருகும். சங்கிரமண கால கிரகஸ்திதியினால் உலகில் உணவுதானியங்களின் விளைவு அதிகரித்துவரும், கருப்பு தானியங்களாகிய உளுந்து எள் மற்றும் கரிசல்பூமியின் விளைவு மிகும். எல்லா பிரஜைகளும் சுபிட்சவாழ்க்கையில் திகழ்வர். தேசங்களில் ஆன்றோர்களால் சிவபுண்ணிய கைங்கர்யங்கள் தர்மங்கள் சூரச்சக்கரம்போல் நடந்துகொண்டிருக்கும். அரசாங்கத்தில் ஆளுநர்களால் மனு நீதி ஆட்சி நடைபெற்று பிரஜைகள் இரக்ஷிக்கப்படுவார்கள். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய [illegible]டங்களில் ஈஸ்வரனருள்பெற்றுவந்து சிவசமய கர்த்தாக்களாகத் திகழ்கின்ற சிவஞான குருமார்கள் கு மகாசந்நிதானங்கள் உலகத்திற்குச் சிவசமய ஆசார விதிமுறைகள் பிரஸ்தாபித்து அவ்வழியில் மாந்தர்கள் உயர அனுக்கிரகம் செய்தருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் விசேஷ உஷாக்கால பூசைகள் இனிது நடைபெறும். எல்லா பிரஜைகளும் தேவாலயம்சென்று உஷாக்காலத்தில்ஈஸ்வரனைத் துதிசெய்து திரு அருள்பெற்று இலட்சுமி கடாக்ஷம் பொருந்தி சுபிட்ச வாழ்க்கை நடத்துவர்.

குருப்பெயர்ச்சி

குறிப்பு :- ஸ்ரீ இரக்தாக்ஷி௵ மார்கழி௴ 23௳ சோமவாரம் சூரிய உதயம் முதல் 56 நாழிகை 23 வினாடிக்கு 8—1—1985 மங்களவாரம் காலை மணி 5, நிமிஷம் 3 க்கு ஸ்ரீ குருபகவான் மேஷாதியாக 270 பாகையைக்கடந்து தனுர் இராசி உத்திராட நக்ஷத்திரம் முதல் பாதத்திலிருந்து இரண்டாம் பாதத்தில் மகர இராசியில் பெயர்ச்சியாகிறார். அதனால் உலகத்தில் இராசியாளர்களுக்குக் குறிப்பிடுகின்ற பலன் அனுபவம் ஆகும்.

ஸ்ரீ குருபகவான் 8—1—1985 முதல் ஒரு ஆண்டுகாலம் மகர இராசியில் நேர்கதி வக்கிரகதிகளில்சஞ்சரிப்பார். அக்காலத்தில் ரிஷபம், கடகம், கன்னி, தனுசு, மீனம் இவ்விராசியை உடையவருக்குத் தனவிருத்தி, சௌபாக்கியம், விவாகபிராப்தி, புத்திர பிராப்தி, விடுமனை பிராப்தி, எதிலும் இலாபபிராப்தி, செல்வந்தர் நேசம், அரசாங்கெளரவம், பட்டம்பதவிகள்வருதல், மேலான சம்பத்து, அதிக சௌகர்யம், சுகம் ஆகிய நற்பலன்களை யளிக்கும். மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், விருச்சிகம்,மகரம், கும்பம் இவ் விராசியையுடையவருக்குக் கிரியைகளில் உழைப்புக்கேற்ற பயனின்மை, தன்பொருளாயினும் தக்க சமயத்தில் பயன்படுதலின்மை, புத்தி சாதுரியம் இருந்தும் தக்கோர் சினத்தலினின்று மீண்டுணர்வாகுதல், இடம் உத்தியோகங்களில் மாற்றம், சிறுமை, ரோகங்களினால் படுதல், தவிர்க்க இயலாத செலவினங்கள் இவை நிகழும். மத்திமபலன்.

சாந்தி பரிகாரம்: எல்லா இராசியையுடையவரும் தேவாலயம் சென்று குருகிரக பிரீதி செய்தும் அருள்மிகு தக்ஷிணா மூர்த்தி சுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்தும் சன்னதியிலேயே ஸ்வர்ண தானம் வஸ்திர தானம் செய்தும் பிரார்த்தித்து வருவதால் சகல பாக்கியங்களும் ஏற்படும். உடல் நலம் தரும். செல்வாக்கு ஏற்படும். அந்தஸ்து உயர்தல் ஆகும்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும சுபபலன் தரும். பணவருமானம் வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரசித்தம் ஏற்படும். தெய்வதரிசனம் செய்தல் நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு ஏற்படுதல் ஆகும். எல்லாக்காரியங்களும் அரசகெடியில் விரைவில் நடந்துகொண்டிருக்கும். டிசம்பர் 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபம.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் கன்யத்திற்கு ஏற்ப வரும். குடும்ப சௌகரியங்

களுக்கு மிக அவசிய செலவினங்களும் ஏற்படும். புனிதஸ்தலம் சென்றுவருதல் ஆகும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியங்களை ஏற்படுத்தும். எல்லாக்காரியங்களும் வெற்றியாக நடக்கும். டிசம்பர் 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் தானிய விளைவுகள் மிகுந்துவரும். ஒப்பந்தம் பத்திர விதிதங்களில் நல்லன ஏற்படும். புதியனதுவங்கும். இயந்திர சாதனங்களில் நல்லன ஏற்படும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். டிஸம்பர் 24, 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் அரசாங்க கௌரவம்தரும். புனிதஸ்தலம்செல்லுதல் தெய்வ தரிசனம் நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு லோக விசாரணை ஆகியவை ஏற்படும். எல்லாக்காரியங்களும் திருத்தமுடன் நடந்துகொண்டிருக்கும். டிசம்பர் 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் நல்லவிதத்தில் வந்துகொண்டிருக்கும். முக்கியவிஷயங்களில் செலவும் ஏற்படும். வீடுவாகனங்களில் நல்லன ஏற்படும். தேகத்தில் ரத்தாதிக்கநலிவுதோன்றிகுணமாகும். எல்லாக்காரியங்களும் தெய்வானுகூலத்தில் நன்கு நடக்கும். டிசம்பர் 29, 30, 31 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வரும். அடிக்கடி வெளிப் பயணமும் செலவும் ஏற்படும். பூமி இயந்திரங்களில் நற்பலன் ஏற்படும். சகோதர வழியில் இருந்த பூசல்கள் நிவிர்த்தியாகும். வீடுவாகனங்களில் நற்பலன் உருவாகும். புத்திரர்களுக்கு உயர்வு தரும். ஜனவரி 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் வெகுவாக வந்துசேரும். இரத்தின பூஷணம் தரும். வாகனசுகம் திருப்தியளிக்கும். வித்துவத்துவம்கலைத்துறைகளில்

புகழ்தரும். எல்லாக் காரியங்களும் வெற்றியாக நடக்கும். ஜனவரி 3, 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும் பண வருமானம் கணிசமாக வரும். பூமி இயந்திரங்களில் பணச் செலவும் ஏற்படும். நெருங்கிய பந்துவில் ஒருவர் சிறிது காலம் பிரிந்திருப்பார். எல்லா நெருக்கடி சம்பவங்களிலும் தெய்வ அனுகூலத்தில் நல்லனவாகும். ஜனவரி 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். தனவருமானம் மிகக்கணிசமாக வந்துகொண்டிருக்கும். இரத்தின பூஷணம் தரும். பூமி இயந்திரங்களில் நற்பலன் வரும். வாகன சுகம் திருப்தியளிக்கும. எல்லாக்காரியங்களும் அரச கண்யமாக நடந்து கொண்டிருக்கும். ஜனவரி 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். தனவரவு வந்து கொண்டிருக்கும். அடிக்கடி அவசிய செலவினங்களும் ஏற்படும். எல்லா நெருக்கடி பிரச்சனைகளிலும் தக்கோர் அனுசரணை ஏற்படும். படபடப்பான பேச்சு வார்த்தை இதயத் துடிப்பு அதிகரித்தல் காணும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்தல் நலம். ஜனவரி 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

11. கும்பம்:- அவிட்டம் ½ - சதயம்-பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் நல்ல விதத்தில் வரவாகும். கௌரவ ஸ்திதியில் மனைவி வழியினரில் நல்லவித செலவினை ஏற்கும். வீடு வாகனங்களில் நல்ல அனுபோகம் தரும். புத்திரர் பௌத்திரர்களுக்கு உயர்வு தரும். ஜீவனோபாயம் தொழில் துறைகளில் மேன்மை ஸ்திதியாகும். ஜனவரி 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபம்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் வரும். பூமி இயந்திரங்களில் ஒப்பந்த விஷயங்களில் பணம் முடங்கும். ஜீவனோபாயம் தொழில் துறைகளில் உத்தியோகத்தில் அரசாங்க அனுகூலங்களை ஏற்படுத்தும். எல்லாக் காரியங்களையும் புத்தி சாதுரியமாக நடத்தச்செய்யும். டிஸம்பர் 18, 19 தேதிகளில் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.